REGISTERED No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI.

*A TAMIL MAGAZINE AND REVIEW.*

DEVOTED MAINLY TO

**LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.**

**EDITOR:**

M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Vol. VIII. No. 1.—January 1905.**

CONTENTS.

PAGE.

I. THE "JNANA BODHINI,"—**Editor** ... ... ... 1

II. ORIGINAL ARTICLES—

1. Sir A. Seshiah Sastri, K.C.S.I. ... ... ...
2. The origin of Kodungallur Temple— **T. Ponnambalam Pillai, M.R.A.S.**... 14
3. Natural History III—On colours— **V. N. Iyengar, M.A.**... 19
4. Bacon's Essays I.—Truth—**S. W. Coomaraswamy** 24
5. On the Twelve Names of Tirumal— **Pandit T. Venkatarama Iyengar**... 27
6. "Be desirous to do deeds of Charity"— **M. V. Meenakshisundaram, B.A.**... 33
7. On Kambar—**A. S. Pillai, B.A.** ... 36

III. LIGHT LITERATURE—

1. Chudamani—(a Metrical Drama)— **V. K Rangachariar**... 39
2. Purnachandrika—(a Romance)—**C. S. Bharati** ... 41

IV. LADIES' PAGES—

Radha and Lakshmi ... ... ... ... 50

V. PERIODICAL LITERATURE—

On Sadayappa the Patron of Kambar ... ... 53

VI. DEPARTMENTAL NOTES—

Musical—**Thirikala Govindan** ... ... ... 55

Madras:

"THE MADRAS LITERARY BUREAU,"

10, BROADWAY.

1905.

Thompson & Co., Printers, Madras.

THE

# Madras Literary Bureau.

---

## OFFICE:

**10, Broadway, Black Town, Madras.**

---

## PATRONS:

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.
Diwan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.
T. Vedadrisadasa Mudaliar, Esq.
*(Retired High Court Judge of Travancore.)*

---

## Honorary Corresponding Members.

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.
G. Subramania Iyer, Esq., B.A.
J. M. Velu Pillai, Esq., F.M.U.
V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.
T. Balasundara Mudaliar, Esq.

---

## SECRETARY:

K. C. Duraisami, Esq.

---

## REPRESENTATIVES:

Throughout Tamil Districts.

---

## ORGAN:

The 'Jnana Bodhini' (ஞானபோதினி),
(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to Literature Science, Philosophy and Religion).

---

## MEMBERS.

Two classes of Members are taken in.
Annual Subscription for First Class Members Rs. 10.
Do do Second Class Members Rs. 2.

To the Members of the first class the organ of the Bureau, *i.e.*, *Jnana Bodhini* as well as all the other publications will be supplied free.

To the second class Members the journal will be supplied at the reduced rate of Re. 1-8-0 per year and the other publications at 33 p. c. less than the original price.

### Only 500 Members.

*I.e.*, 200 First Class Members and 300 Second Class Members · dm
For particulars, and Application Forms apply to the Secretary.

---

The '*Madras Literary Bureau*' has the following separate Departments:

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying, and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers, passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novels, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of work into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

# ஞானபோதினி.

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்
## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VIII. | 1905-ம் ஸ்ரீ ஜனவரிமீ | சஞ்சிகை 1.

வருஷசந்தா ரூ 2—8—0
(முன் பணம்)
விளம்பரம் விகிதம்,
முழுப் பக்கத்திற்கு ரூ. 10.
அரைப்பக்கத்திற்கு ரூ. 6.
ஒப்பந்த விகிதம் எழுதித் தெரிந்து
கொள்ளலாம்.
எல்லாவற்றிற்கும் எழுதும் விலாசம் மதராஸ்
லிடரரி பூரோ செக்ரடரி, சென்னபட்டணம்.

*Jnana Bodhini.*

Annual Subscription, Rs. 2—8—0.
Strictly payable in Advance.
(Post free).

Advt. Charges: Full page Rs. 10.
Half page Rs. 6.
Contract Rates on application.
Apply to the Secretary, Madras Literary Bureau,
10, Broadway, Madras.

## உள்ளுறைகள்.

| | | பக்கம். |
|---|---|---|
| I. | ஞானபோதினி— பத்திராசிரியர். | 1 |
| II. | விசேட நிருபங்கள் :— | |
| 1. | ஸர், அமராவதி சேஷய்ய சாஸ்திரிகள், கே. ஸி. —எஸ். ஐ. S. N. ஸ்ரீனிவாஸன் | ... 3 |
| 2. | கொடுங்கல்லூர் ஆலயவரலாறு--T. பொன்னம்பலம் — பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ். | ...14 |
| 3. | ஜீவஜெந்துக்களின் நிறமும் அதன் பயனும்— V. N. ஐயங்கார், M. A. | ...19 |
| 4. | வியக்கோன் விரியுரைகள். I. உண்மை.— S. W. குமாரசுவாமி. | ...24 |
| 5. | திருமாலின் பன்னிருநாமப் பொருள் விளக்கம் IV. தி. வேங்கடராம ஐயங்கார் | .. 27 |
| 6. | "அறஞ்செயவிரும்பு"— —M. V. மீனுக்ஷிசுந்தரம், B. A., M.R.P.S. | ...33 |
| 7. | கம்பர்.—A. S. பிள்ளை, B. A. | ...36 |
| III. | சிறுநூல்கள்.— | |
| 1. | சூளாமணி நாடகம்—V. K. அரங்காசாரியர் | ...39 |
| 2. | பூர்ண சந்திரிகா—(ஓர் நவீனகதை) C. S. பாரதி | ...41 |
| IV. | மாதர்க்கிதமான பக்கங்கள்.— இராதா இலக்ஷ்மி வாழ்க்கை | ...50 |
| V. | பலபத்திரிகா வித்தார மஞ்சரி.— சடையப்ப வள்ளலார் புகழ்ச்சி. | ...53 |
| VI. | பலதுறைக் கலா விசேடக் குறிப்புகள்— சங்கீதம்—திரிகால கோவிந்தன் | ...55 |

சென்னை:
தாம்ஸன் கம்பெனியில்
பதிப்பித்தது.
1905.

# ஞானபோதினி.

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VIII. | 1905-ம் ௵ ஜனவரி ௴ | சஞ்சிகை 1.

## JNANA BODHINI.

## ஞானபோதினி.

சேந்தமிழ் போற்றுஞ் செல்வர்காள்!

நுந்தம் ஆசிர்வாதத்தால் இப்பொழுது ஞானபோதினிக்கு எட்டாவது பிராயம் ஆரம்பமாகின்றது. சென்ற எழு வருடங்களில் நீவிர் நமது எழுத்தினாலும் வாக்கினாலும் பொருளுதவி செய்தும் ஞானபோதினியைப் பாதுகாத்து வந்தது போலவே இனியும் அது மேன்மேலும் விருத்தியாகும்படி பலவாறு உதவி புரிவீர்களென்று உண்மையாய் நம்புகின்றனம்.

சென்ற எழு வருஷங்கள் தமிழ்சரிதம், இலக்கணம், பொருணூல், உடல்நூல், வைத்தியம், தத்துவம், கானம், நாடகம், கல்வி, சமயம் முதலான விஷயங்களைப்பற்றி, வாசகங்களும் கவிகளும் வரைந்தனுப்பிய கலா விநோதர்களுக்கு நாம் எந்நாளும் நன்றி பாராட்டுவாம். இவர்களில் அநேகர் சென்னைசர்வகலாசாலையில் எம், ஏ., பி. ஏ. பட்டம்பெற்றவர்களென்பது நன்கு விளங்கும். இவர் போல மற்றவரும் ஞானபோதினிக்கு உதவி புரிய வேண்டுகின்றனம்.

இப்பத்திரிகைக் கெழுதுங் கனவான்கள் தயை கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயங்கள்:—

1. மையூறாத கடிதாசியில் மையையேயுபயோகித் தெழுதக் கடவர்கள். எழுத்துக்களும் ஒன்றோடொன்று கலவாமற் றெளிவா யெழுதல் நலம். இவ்வாறு எழுதப்படாதகாலை அச்சடிப்பாரும் நாமும் படுங்கஷ்ட மிகுதியு முண்டென்பது முதலாவது கவனிக்கவேண்டிய விஷயம்.

2. பத்திரிகைக் கெழுதும் விஷயங்கள் கதாரூப மாகவும், சாஸ்திர விளக்க ரூபமாகவும், நாடக ரூபமாகவும், சமயபோத ரூபமாகவும், கல்வி முறைவிளக்க ரூபமாகவும் பலதிறத்தினு மெழுதப்படலாம். இவற்றுட் கதையும் நாடகமும் அந்நிய பாஷையிலிருந்து தமிழிற் சுயபாஷை போக்கறிந்து மொழிபெயர்க்கப்பட்டனவாதல், தமிழிலேயே யுள்ள வான்றோர் நூல்கள் வேறு ரூபப்பட்டுத்தோன்றியாதல் இருப்பின் மிக்க நலமுடையவாம். அன்றி எழுதுவோர் யாரும் யாவரானும் எழுதப்படாததொரு கதையியற்றுவே மென்று புகுதல் சாலாதன்றே! மொழிபெயர்த்தலும் ஆன்றோர் நூல்களை யாசரித்தெழுதலும் இகழ்வுடையவென்று கொள்ளுவோர் இவ்விருவகை யொழிந்த பிறவகைகளிற் றம்மதியைச் செலுத்தி நல்விஷயங்களை யெழுதுக. சாஸ்திரவிளக்கஞ்செய்வோர் பாமரர்க்கும் விளங்குமாறு எளிய நடையிலெழுதக்கடவர். சமயவிஷயங்கள் சமரசமாயிருத்தலே சால்பு. இனி, செய்யுள்ரூபமாகச் சிறுநூல்கள்செய்தனுப்புவோர் அவை யாவர்க்கும் விளங்கு மெளிய நடையிலெழுதப்படல் வேண்டுமென் றறியக்கடவர். பழையவழக்கம் பற்றி யமகந்திரிபில் யாத்த செய்யுட்கள் பத்திரிகைக்குப் பயன்படாவாகலின் அதை யொதுக்கப்படுமென்று முணரக் கடவர்கள்.

3. விஷயங்கள் ஒவ்வொரு சஞ்சிகையிலேயே முடியக்கூடியனவாயிருப்பின் நலம். தொகுதியாக எழுதி நீட்டிக்க விரும்புவோர் ஒருவருஷ சஞ்சிகைகள் கொள்ளுமளவறிந்து தம்விஷயத்தைச் சரிப்படுத்த வேண்டும். ஓராண்டெல்லையுங் கடந்து போமாயின் நூதனவருஷத்தோடு பத்திரிகை தொடங்குவோர் வருந்துவரென்பதைச் சற்று கவனிக்கக்கடவர்.

பத்திராதிபர்.

## SIR A. SESHIAH SASTRI, K. C. S. I.

## அமராவதி சேஷய்ய சாஸ்திரிகள், கே. ஸி. எஸ். ஐ.

ஸர். சேஷய்ய சாஸ்திரிகள்:—

கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் போகு மார்க்கத்து வெட்டாற்றுத் தென்கரையி லிருக்கும் அமராவதியென்னும்கிராமத்தில் 1829-ம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் மிக்க பூஜ்யராயினும் எளியோர். அக்காலத்தில், ஆங்கில பாஷாப்பியாஸமென்று பெயர் வகிக்கத்தக்க படிப்பு சென்னையில் மாத்திரந்தான் சரிவர நடந்து வந்தது. ஆகையால் அப்பொழுதுதான் ஸ்தாபிக்கப் பெற்ற பச்சையப்பன் கலாசாலையில் கல்வி பயிலும்பொருட்டு நமது இளஞ்சாஸ்திரி சென்னைக் கனுப்பப் பெற்றான். பச்சையப்பன் பள்ளியில் சாஸ்திரிமாணுக்கனுயிருந்த காலத்துப்படிப்பில் மிக்க கவலைசெலுத்துபவனுயிருந்ததுமன்றி, பிரசங்கம் செய்வதில் மிக்க வல்லமையுடையவனென்றும் மதிக்கப் பெற்றான். 1846-ம் வருடத்தில் சேஷய்ய சாஸ்திரிதான் பயிலும் கல்விச்சாலையிலேயே ஒரு உபந்யாசஞ்செய்தான். அப்பிரஸங்கத்து வாக்கியங்களிற் சிலவற்றை "கிரஸன்ட்" எனும் பத்திரிகையில் புகழ்ந்தும், மதாசார விவகாரங்களைப் பற்றி இவனது அபிப்பிராயத்துக்கும், ஹிந்து மதத்தினின்று கிறிஸ்துவரானவரும் பாதிரிமார்களால் சிலாகிக்கப் பெற்றவருமான ராஜகோபாலென்பவரின் அபிப்பிராயத்துக்கு முள்ள வேற்றுமையை எடுத்துக் காட்டியுமிருந்தது. 1848-ம் வருடம் (Proficiency) பரீக்ஷையில் முதல் வகுப்பிற் தேறி நமது சாஸ்திரி பட்டம் பெற்றான். பவ்வல் துரை இவனைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டார். 1848-ம் ஆண்டு செப்டம்பர் மீ சாஸ்திரியார் ரிவினியூபோர்டு ஆபீஸில் 25ரூ. குமாஸ்தாவாய், சர் ஹென்ரி பைக்கிராப்ட துரையினிடத்து வேலைபார்த்தார்.

1849ம்வரு ஜூன்மீ போர்டாபீஸ் ஸீனியர் மெம்பர் சர்வாட்டர் எலியட்டு துரையுடன் நமது சாஸ்திரியார் வடசர்க்கார் மாகாணச் சுற்றுப்பிரயாணஞ் சென்றார். அங்கு இவர் ஆபீஸ் நடவடிக்கை கற்றுக்கொண்டது மன்னியில், தாவர சாஸ்திர நாணய புராதன ஆராய்ச்சி விஷயங்களில் எலியட்டு துரைக்கு மிக்க சகாய கராயுமிருந்தார்.

1851ம்வரு மேமீ சேஷய்யசாஸ்திரியார் மஸூலிபட்டணம் தாசில்தாராக நியமனஞ் செய்யப் பெற்றார். 1854ம் ஆண்டு பிப்ரவரிமீ

த்தில் நாயிப் சிரஸ்ததாராக இவர் ஆக்கப் பெற்றார். இவ்விடத்திலே யே இவர் தெலுங்கு பாஷையைக் கசடறக்கற்றார். 1855ம் ஆண்டில் இவர் மஸூலிபட்டணம் தலைமை சிரஸ்தாதாராயினர். ஹிந்துஸ்தானி யும் இவர் நன்கு பேசுவார். அரசிறையரசாட்சியில் கிருஷ்ணா ஜில்லாவை இவர் சீர்திருத்தினர். மஸூலி பட்டணத்துக்கு வேலையாய்ச் செல்லுங் காலத்து, மிக்க க்ஷீண திசையிலிருந்தது அந்த ஜில்லா. 8 வருடங் கழித்து 1859-ம் ஆண்டில் அதினின்றும் இவர் மாற்றப் பெற்ற காலத்து, நிரம்பவும் நல்ல நிலைமையிலிருந்தது. அஜ்ஜில்லாவுக்கு இவர் செய்த சீர் திருத்தங்களை ரெவினியூ போர்டாபீஸ் ரிகார்ட் மூலமாக இன்றைக்குங் கண்ணுறலாம். இந்தியாவில் விளைந்த பெரிய கலக காலத்தில் மஸூலிபட்டணத்து கலகக்காரர்களைக்கலகத்தினின் றும்தடுக்கவேண்டிய முயற்சிகளை வெகுவாய்ச் செய்திருந்தார்.

மகாராணியவர்கள் இந்தியா ராஜ்ய பாரத்தை வகித்த காலத்து இந்தியாவிலிருந்து அனுப்பப் பெற்ற அநேக (அட்ரஸ்களில்) ஆசிப் பத்திரிகைகளில் நமது சாஸ்திரியாரதுவே நன்றாக விருந்த தென்று எல்லோரும் இவரைக் கொண்டாடினார்கள்.

இனாம் கம்மிஷனர் ஜியார்ஜ் நோபில் டேயிலரின் கீழ் டிப்டி கலெக்டராக வேலை செய்ய 1859-ம் ஆண்டில் நமது சாஸ்திரியார் உத்திரவு பெற்றார்.

இனாம் கமிஷன் டிப்டி கலெக்டராகவும், ஸ்பெஷல் அஸிஸ்டண்டாகவு மிருந்து சிரமமும்பிரயோஜனமும் பொருந்திய செய்கைகளை நமது சாஸ்திரியார் 1859-ம் ஆண்டு முதல் 1866 வருடம் வரைக்கும் செய்தார்.

1872-ம் வருடம், திருவாங்கூர் திவானாக சர். டி. மாதவராவுக்குப் பிறகு நமது சாஸ்திரியாரை அனுப்பினார்கள். அங்கு இவர் 5 வருடகாலம் வேலை பார்த்து அவ்விராஜியத்திற்கு அநேக நன்மைகளைச் செய்தார். திருவாங்கூர் சமஸ்தான வருமானத்திற் காஸ்பதமான வரிகளைச் சரிப்படுத்தியதே இவர் அந்த இராஜ்யத்திற் செய்த முதற் சீர் திருத்தம். அந்த சமஸ்தானத்தைச் சார்ந்த அன்னதான சத்திரங்களில் நடந்துவந்த ஊதாரிகளை இவர் வேரறக் களைந்தார். உப்பு வியாபாரத்தில் நடந்த அநேகவித மோசங்களை அடியோடு நீக்க

வேண்டிய ஏற்பாடுகள் பலவற்றை நமது திவான் செய்து முடித்தார். அக்காலத்து உப்பு வியாபாரிகள் உப்பு வாங்குவோர்களுக்கு அநேக வித மோசங்களைச் செய்வார்கள். உப்பு வாங்கும் சாமான்ய ஜனங்கள் தாங்கள் சரியாக வாங்குவதாய் நம்பினவர் நம்பிக்கையையேகாரணமாகக் கொண்டு அவ்வியாபாரத்திற் கென்றேற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் வாங்குபவர்களை வஞ்சித்து அதனால் வருமதிக லாபத்தைத் தாங்களே ஸ்வீகரித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதம், இராஜாங்கத்திற்கு இலாபமில்லாமலும ஜனங்களுக்கு நன்மையில்லாமலும், தப்புப்படிகளா லளவைசெய்துவியாபாரிகளடித்த கொள்ளையை நிறுத்த, நமது சாஸ்திரியார் முகத்தளவைப்படி உப்பு விற்கக் கூடாதென்றும், நிறுத்தலளவே உப்பு விற்க உபயோகிக்கப் படவேண்டுமென்றும் உத்திரவு பிறப்பித்தார். இவ்வித அளவின் படியும் வியாபாரிகள் மோசஞ் செய்யக்கூடு மென்றாலும், அம்மோசத்தை சாமான்ய ஜனங்கள் கண்டு பிடிக்க ஏதுவாயிற்று.

ஜனங்களுக்கு முந்தி எவ்வளவு உப்புக் கிடைத்ததோ, அதைவிட அதிகஉப்பு இப்பொழுது அதேபணத்துக்குக் கிடைப்பதாயிற்று.

இராஜாங்கத்தைச் சேரவேண்டிய வரி வசூல் தொகை அநேக குடிகளிடத்துப்பாக்கி யிருந்தது. இவ்விதமாய் வெகு காலம்வரை சேர்ந்து நின்ற வரிப்பணத்தைச் செலுத்தச் சக்தியற்றவர்களாய் ஜனங்கள் மிக்க கஷ்ட திசையிலிருந்தார்கள். அவர்களளிக்கிற வரிப்பணம் பழையபாக்கிக்குச் செல்லாயும், அவ்வருடத்தியபுதுவரி அடுத்த வருடத்துப் பழைய பாக்கியாயு மிருந்துவந்தது. குடிகளின் ஏழைமையை உத்தேசித்துப் பழைய பாக்கியைமுற்றிலும் தள்ளுவது உசிதமென்றாலும், இவ்விதஞ் செய்வதசாத்திய மென நமது திவானுணர்ந்து, குறிப்பிட்ட தினத்தில் செலுத்துவோர்களுக்குப் பழைய பாக்கியிற் கொஞ்சம் தள்ளிக் கொடுக்கப்படுமெனவிளம்பரஞ் செய்யச் சொன்னார். இவ்விதம் வாக்களிக்கப் பெற்றநமது திவானவர்களின்நன்மையை யடையும்பொருட்டுக் குடிகள் சீக்கிரத்தில் பணஞ்சேர்த்துத் தங்கள் பாக்கியைச் சடுதியில் தீர்த்தார்கள்.

நமது திவான் காலத்துக்கு முன் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒவ்வொரு ரிகார்டும் பனையோலையி லெழுதப் பெற்றிருந்தது.

அடியோடே இவர் அவ்வழக்கத்தை நிறுத்தினர்; பனையோலைக்குப் பதிலாகக் கடிதங்களை உபயோகிக்கச்செய்தார்.

1875-ம் ஆண்டில் நமது திவான், நியாயஸ்தலத்தையும் வக்கீல்களையும் பற்றிய சீர்திருத்தங்களைச் செய்ய முன்பட்டார். பரீட்சை தேறியவர்களாகவாவது அல்லது யோக்கியதா பட்டம் பெற்றவர்களாகவாவது வக்கீல்கள் அவ்வூரில் இருந்தவர்கள் அல்லர். யாதொரு பரீட்சையும் அவ்வேலைக்காக அங்கே ஏற்படவில்லை. ஆகையாலதைச் சீர்திருத்துவதே முக்கியமான விஷயமெண்றெண்ணி ஒரு பரீட்சையை ஏற்படுத்தினர். அதில் தேறியவர்களே பெரியகோர்ட்டிற் பேசவேண்டுமென்றும், மற்றவர்கள் கீழ்க் கோர்ட்டில் மாத்திரமே பேசலாமென்றும் சட்ட நிரூபணஞ் செய்தார். ஐந்து வருட காலம் திவானக விருந்த பிறகு மாதமொன்றுக்கு 500 ரூ. வீதமுபகாரச் சம்பளம் பெற்று நமதுசாஸ்திரியாரவர்கள் 1877ம்ஷு திருவாங்கூர் சமஸ்தான வேலையினின்றும் நீங்கி இளைப்பாறுவானமர்ந்தார்.

1877ம்ஷு ஜனவரிமீ முதல்தேதி இவருக்கு ஸி. எஸ். ஐ. பட்டமளிக்கப்பட்டது. வேலையை விட்ட பிறகு இவர் கனம் வெட்ஸ்டர் துரையுடன் 1887-ம் ஷு பஞ்சத்தால் பீடிக்கப்பெற்ற ஜனங்களுக்கு இங்கிலாண்டு அரண்மனையாரால் அனுப்பப்பட்ட (Mansion house) பணத்தைப்பலருக்கும்விநியோகித்தார்.

இச்சமயத்தில் புதுக்கோட்டை இராஜ்யம் மிக்க க்ஷீண திசையிலிருந்தது. ஆதலால் அவ்விராஜ்யத்தைச் சீர் திருத்த 1878-ம் ஆண்டில் மதராஸ் கவர்னராயிருந்த பக்கிங்காம் பிரபு (Duke of Buckingham) இவரை அவ்விராஜ்யத்துத் திவானக நியமித்தார். இவர் வேலையை ஒப்புக்கொண்ட காலத்து அவ்விராஜ்யத்துக் கஜானா வறண்டிருந்ததாகவே கூறலாம். இராஜ்ய வருமானமோ நிலவரி ஒன்றை மட்டுமே பொருந்தி யிருந்தது. இதுவும் அமானி ஏற்பாட்டின்படி வாங்கப் பெற்று வந்தது. இவ்வித வரி வாங்கும் வழக்கம், இராஜ்யத்திற்கும் ஜனங்களுக்கும் கெடுதலாக விருந்தது. உப்படி காலங்களில் நிலங்களில் விளைந்திருக்கும் தானியங்களுக்கு மதிப்புப் போடவும், அதை அறுத்துக் களஞ்சியம் சேர்க்குங் காலத்துக்கண்காணிக்கவும், இறைக்காக வந்த தானியங்களைச் சேர்த்து வைக்கு மிடங்களில் அ

ளைதக் காவல் காக்கவும் அநேக சிப்பந்திகள் ஏற்படுத்த வேண்டியிருந்தது. இவ்வித ஏற்பாட்டால் குடிகளுக்கு நஷ்டங்கள்ஏற்படும். அவை இராஜாங்கத்தாரையும் விடா. எப்படி எனில் சரியானகாலத்தறுத்துக்களத்திற் சேர்ப்பதிற் கில்லாமல் அதிகாரிகளின் வரவை நோக்கிய வண்ணமிருந்து தாமதப் படுவதால் தான்ய நஷ்டம் குடிகளுக்கேற்படும். அதிகாரிகள் மதிப்புப்போடுவதில் மிகுதியான தான்யங்களைத் தாங்கள் அபகரிப்பதினுலும், வரியாகவந்த தான்யங்களைக்காப்பாற்றி நியமிக்கப்படுஞ் சிப்பந்திச்செலவுகளாலும் இராஜ்யத்திற்கு உபாதை நேரும். மேற்கூறியவிதம் சர்க்கார் உத்தியோகஸ்தர் புரியும் அயோக்கியத்தன்மையால் அவஸ்தைப்படும் குடிகள்நாளடைவில் சாகுபடி செய்யமனமற்றவர்களானுர்கள்.

இவ்விதம் வரிவாங்குவதும், இதை இறுப்பதும், அதனுல் விளையும் கேடுகளும் இராஜியத்திற் கேற்காதனவென்று திவான் இராஜாவிடங்கூறியபின், அவ்விராஜாவும் சாஸ்திரியார் மனப்படி சீர்திருத்தஞ்செய்ய வனுமதிதந்தனர். ஒவ்வொரு சீர்திருத்தத்திற்கும் பிரதானமா யிருக்கவேண்டிய பணம் பொக்கிஷத்தில் இன்மையால் இதை நிரப்பக் கருதியவராகி நமது சாஸ்திரிகள் வரி விஷயச் சீர்திருத்தத்தை முதல் முதலிற் செய்ய ஆரம்பித்தனர். 'அமானி' வழக்கத்திற்கு இராஜாக்கொடுத்துவிட்டுப் பணமாகவேவரியைக்கட்டும்படி குடிகளுக்காஞ்ஞாபித்தார். இதற்குஓர்சட்டத்தையும் ஜாரிசெய்வித்தார். ஆனுல் குடிகள் இதன் அனுகூலங்களையறியாது ஆரம்பத்தில் கூக்குரலிட்டார்கள். குடிகள் வாயில் சாஸ்திரிகள் கண்டபடி விழுவாராயினர். இதை நிறுத்தும்பொருட்டு அவர்களுக்குள்ளிருக்கும் மற்ற பெரிய குடித்தனக்காரர்களை நேரிற்கூட்டிப் புது வேற்பாட்டின் சாதகங்களை எடுத்துவிளக்கி ஒப்பமொழிந்தார். அவர்களால் குடிகள் அடங்கினுர்கள்.

இவ்விதமாய் 4, 5 வருங்களுக்குள் அமானி யேற்பாடுமுழுதும் நின்றுவிட்டது. இதற்குப்பின் வாரவரி யேற்பாடும்வந்தது. இவ்வித ஏற்பாட்டின் வண்ணம் ஜனங்களுக்கு ஏற்படும் வரி அதிகமில்லாவிடினும், இராஜ்யத்தின் வருமானமும் செலவுபோகமிகுந்த நின்றபணமும் அதிகமாகவேயிருந்தன. இவ்விதம் மிகுந்து நின்ற பணத்தைக்

கொண்டு வெகுகாலமாகத்தூர்ந்திருந்த கண்மாய்களையும் கால்வாய் களையும் வெட்டெடுக்கத் திவானவர்கள் உத்திரவு பிறப்பித்தார்.

புதுக்கோட்டை யிராஜ்யத்து இரஸ்தாக்கள் அக்காலத்தில் வெகு கெட்டஸ்திதியிலிருந்தன. கற்களிட்டுக் கெட்டிபடுத்தப்பட்டசாலைகள் பிரயாணத்துக் குபயோகமில்லாமலும், அவ்வண்ணஞ் செய்யப்படாத பாதைகள் புழுதிமயமாயும் மணலாயுமிருந்தன. மேலும் அப்பட்டணத்து வீதிகளை இராக்காலத்தில் விளங்கவைப்பதற்கேற்ற விளக்குகள் எங்கங்கேயும் கிடையா. நியாயஸ்தலங்களும் சரியான நிலையிலில்லை.

தேசாசார நியாயவிசாரணைகள் இவ்விராஜங்கத்தில் அங்குமிங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கோர்ட்டு முனிசீப்கள் சிலராலும், இம்முனிசீப்கள் விசாரணை தீர்ப்புகளின் நியாய அநியாயத்தை மறுபடியும் விசாரிக்கத்தக்க அதிகாரத்தோடுங்கூடியமேல்உத்தியோகஸ்தராலும், தேசாசார அரசிருக்கை முதலிய விஷயங்களின் விசாரணை அதிகாரம்பெற்ற புதுக்கோட்டை நியாயஸ்தல நீதிபதி ஒருவராலும், தமது ஆலோசனைகளில் 'விரிகீல்' அல்லது திவானுல் உதவிசெய்யப்பெற்று அரசனுல் மேல் பார்க்கப்பெற்று விளங்கும் இராஜாங்க முழுமைக்கும் ஒரே நியாயஸ்தலமாகவுள்ள அப்பீல் கோர்ட்டின்றினுலும் நடத்தப்பெற்றுவந்தன. துஷ்க்கிருத்தியத்தைப் பற்றியநியாயவிசாரணைகள் அவ்விராஜங்கத்தில் சிற்சில விடத்துள்ள சப்மாஜிஸ்திரேட்டுகளாலும், தாசில்தார்களாலும், டிப்டி கார்வார்களாலும் விசாரிக்கப் பெற்றுவந்தன. வித்தியாவிஷயங்கள் மேம்பாடான நிலையிலிருக்கவில்லை. பிரதமப்படிப்பைப் பரவச்செய்ய மிக்ககவலை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமு நேர்ந்தது. பெண்கள் கல்வியும் முக்கியந்தானென்று அக்காலத்தில் அவ்விராஜங்கத்தில் ஒருவருமறிந்திருந்ததாகத் தெரியவில்லை. பெறும்பேறுகளால்ஆதரிக்கப்பட்ட தேவஸ்தான கைங்கிரியங்கள் மிக்க அஜாக்கிரதையுடன் செய்யப்பெற்றதால், காரிய விசாரணையும் கண்காணிப்பும் வேண்டுவ தவசியமெனத் தெரிந்தது. சுருக்கமாக, அரசாட்சியினுவ்வொருபகுதி உத்தியோகங்களும், உடனே சீர்திருத்தப்படாவிடின் க்ஷீணதிசையை யடையும்போலிருந்தது. வருஷத்திற் செலவுபோக

அரசிறைப்பணத்து மீதமாகிய சொற்ப் தொகையைக்கொண்டுஎல்லாவித சீர்திருத்தங்களையும் உடனேசெய்வது அசாத்தியமெனக்கண்டவர். ஏககாலத்தில் அரசாட்சியி னெவ்வொரு பகுதிக்கும் சீர்திருத்தம் ஏற்படாவிடின், அரசாட்சி முழுதுமே நாசமுறும் என்பதையும் ஆலோசித்தார். அதிருப்திக் காஸ்பதமான காரணங்களுக்காக முன்னோரால் கொடுக்கப்பட்டஇனும் நிலங்களைக்குடிகளிடம் இருந்து இராஜாங்கத்திற்கு சேர்த்துவதாகவும் உறுதி செய்துகொண்டார்.

அரசாட்சியின் ஒவ்வொரு பகுதியிலுள்ள கெடுதல்களையும் செம்மைப்படுத்திக் குறைவுகளைப் பூர்த்தி செய்யத்தம்மால் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவையும் அதிக சாமர்த்தியத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் செய்ய நமது திவான் தீர்மானித்தார்.

மகாராஜா பள்ளிக்கூடம் 1882ம்வருஷத்தில் 2வது கிரேட் காலேஜாக மாற்றப்பெற்றது. இவர் சீர்திருத்தம் செய்ய நினைத்த அடுத்தவிஷயம் காட்டிலாகாவைப்பற்றியது. புதுக்கோட்டைப்பட்டணத்துக்கும் அதைச்சார்ந்திருந்த ஊர்களுக்கும் அடுத்த காட்டிலிருந்த விறகே உபயோகமாகிவந்தது. நாளடைவில் காடுமுழுதும் இதனால் அழிந்துபோய்விடும் என்றெண்ணி இவ்விராஜதானிக்குத் தெற்கேயுள்ள ஜில்லாக்களில் சவுக்குமரங்கள் விறகுக்கு உபயோகமாவதை நோக்கி பாலாற்றுக்கரையில் ஆயிரக்கணக்கான சவுக்குமரங்களைப் பயிரிடும்படி உத்திரவளித்தார். இவர் மனத்தைக்கவர்ந்த அடுத்தவிஷயம் குளங்களின்நிலைமை. ஜனங்களுக்கு ஸ்நானபானத்துக்கு உபயோகமாகும் வண்ணம் குளங்களைச்செய்து அதில் வேண்டியவளவு ஏராளமான தண்ணீரை நிரப்பி அதிலுள்ள சேற்றையும் வண்டல்களையும் அப்போதைக் கப்போது நீக்கிவைப்பதே அவசியமென்றார். இதற்காகச் சிறுகச்சிறுக வேலை நடத்திவந்தால் காலதாமதம் அதிகமாகுமென்று கருதி இராஜ்யத்தைச்சேர்ந்த சிறு கிராமங்களிலுள்ள வேலையாட்களையெல்லாம் முறைப்படியேவந்து வேலை செய்யவேண்டுமென ஆஞ்ஞாபித்தார். 3000முதல் 7000ஜனங்கள் வரை ஒரு குளமல்லது மற்றொருகுளத்தில் வேலைசெய்தார்கள். ஆகையால் சொற்ப காலத்திற்குள் பெருங்குளங்களிலிருந்து சேறும், வண்டலும் எடுக்கப்பட்டன. இவ்வேலை ஆரம்பித்து முடிக்கப்பெற்ற சில

வருஷங்களில் நம் அதிர்ஷ்டத்துக்கேற்றவண்ணம் மழை அதிக மில்லை. இவ்வண்ணம் குளங்களையெல்லாம் தூர்வையெடுத்து, வருஷ முழுது முபயோகமாகும் வண்ணமவைகளைச் செய்தபிறகு, புதுக் கோட்டையிலிருந்து கோகர்ணம் போகிறரஸ்தாவையும், திருச்சி தஞ்சாவூர் மதுரை செல்கிற ரஸ்தாக்களையும் கவனித்தார். புதுக்கோட்டை ரோட்டுகளெல்லாம் நன்ருய்ச் சாலைகளிடப்பெற்றுக்கெட்டிப் படுத்தப்பட்டன. புதுக்கோட்டை இராஜ்யத்துச்சாலையும், ஆங்கிலேய அரசாட்சியினுர்களின் சாலையும், சேருமிடத்தில் ஒருகுருடன்நின்று பார்த்தாலும்முந்தியசாலைகளை விசேஷமானவையென்றேகண்டுபிடிப்பான். திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கும், புதுக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் திருச்சிக்கும் இடையே ஓடும் ஜட்காவண்டிக்குதிரைகளுக்குப் புதுக்கோட்டை சமஸ்தான இரஸ்தாவிலிருந்து வேறுஊர் இரஸ்தாவுக்குச் செல்லும்பொழுது உற்சாகம் குறைவதை இன்னும் நாளையும் நாமே நோக்கலாம்.

புதுக்கோட்டை இராஜா, 1886ம் வரு எப்பிரல்மீ த்தில் காலஞ்சென்ருர். இளையவர் ராஜாபட்டங் கட்டிக்கொண்டார். இவர்மைனராணபடியால்திவான், அதுமுதல் மந்திரியும் அதிபதியுமானுர். தாம் அநேக நாட்களாகச் சிந்தித்துக்கொண்டிருந்தும் இராஜாவின் அனுமதி கிடைப்பது சிறிது சிரமமாயிருந்த சீர்திருத்தங்களை எல்லாம் இப்பொழுது தாமே உண்டாக்கும் வல்லவராயினுர். இராஜா இறந்ததின்பின் இவர் சீர்திருத்த எடுத்துக்கொண்ட முதல் விஷயம் அப்பீல் கோர்ட் சீர்திருத்தம். அப்பீல் கோர்ட் காரியங்களையெல்லாஞ் செய்ய இதுவரை ஒரே ஒரு உத்தியோகஸ்தர் தானிருந்தார். அப்பீல் ஜட்ஜுகளுள் கடைசியான வெங்கட்டருவ் அப்பொழுதுதான் உபகாரச் சம்பளம்பெற்று வேலையை விட்டார். அதுமுதல் அப்பீல் கோர்ட்டும் எடுபட்டது. 1887 வரு ஜனவரிமீ முதல்தேதி யன்று இதற்குப் பதில் சென்னை ஹைகோர்ட்டின் மாதிரி 3-ஜட்ஜிகளுடன் புதுக்கோட்டையில் நியாஸ்தலமொன்றை இவர் ஏற்படுத்தினுர்.

திவான் மனத்தைக் கவர்ந்த அடுத்தவிஷயம் இனும் நிலங்களை சுவாதீனப்படுத்துவதும், இப்பொழுது இருக்கப்பட்டவர்களாலேயாவது,அவர்கள் முன்னோர்களாலேயாவது இரஜாங்கத்துக்குச் செய்யப்

பட்டதொழில்களுக்கோ அல்லது செய்ததாகச்சொல்லிக்கொள்வதற் காகவோ கொடுத்திருக்கப்பட்ட சிலவித கொடைகளைக் கைக் கொள்ளுதலுமே. முதலில் சொன்ன சீர்திருத்தத்தைச் செய்து முடிக்க சில வருஷங்கள் வேண்டி யிருந்தது. ஏனெனில் இனம் நிலங் களின் விஸ்தீர்ணத்தை அளந்தறிய வேண்டி யிருந்தது. உண்மை அளவுக்குமேல் இனம் சொந்தக்காரர்களிட மிருக்கிற நிலத்தை யெல்லாம் இராஜ்யத்திற்குச் சேர்ந்ததென்று பாத்தியம் கொண்டா டலாயிற்று. மற்றவைகளுக்கு சொல்பவரி போடப்பட்டது.

இச்சீர்திருத்தம் சில இனம்தாரர்களுக்கு வருத்தத்தை யுண்டு பண்ணிய போதிலும் கஜானாவில் அதிகபணஞ் சேரச்செய்தது. சே ஷய்ய சாஸ்திரிகள் ஆளுகையில் அநேக ஞாபகச் சின்னங்களுள் பப் ளிக் ஆபீஸ் கட்டடங்களு மொன்றே. புதுக்கோட்டையில் மூலைக் கொன்றாய்ப் பல ஆபீஸ்கள் இருந்தன. ஒரேதினத்தில் இரண்டு ஆபீஸ்களின் சங்கதியறிய வேண்டியவன் மிக்க கஷ்டத்திற்குள்ளாக வேண்டியிருந்தது. ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை செல்வதற் கே காலஞ் சரியாக விருந்தது. அது இப்புண்ணியரால் நீங்கியது.

16-வருஷகாலம் திவானாகவும், திவான் ரீஜண்டாகவும் நமது சாஸ்திரியா ரிருந்த காலத்துச் செய்த முக்கியமான சீர் திருத்தங்கள் மேற்கூறியவைகளே. ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் மிக்க ஜாக்கி ரதையுடன் சிந்தித்து அபஜய மடையாது செய்து முடித்தார். கஜானா வின் பணமின்மையும் சிற்சில சீர்திருத்தங்களைச் செய்ய அவரைக்கட் டாயப்படுத்தியது. அவ்வரியால் தாக்கப்பட்ட சிற்சிலர் அவ்வித சீர்திருத்தங்களைக் கண்டு முணுமுணுத்தாலும், அச்சீர்திருத்தங்கள் நியாயமில்லை யென்று நல்லறிவோடு கூடிய எவனும் சொல்லத்துணி யான். இது சரதம். பொது ஜனநன்மைக் குபயோகப்படக்கூடிய க ட்டிடங்களை ஸ்தாபித்தது, பல முக்கிய நிரந்தர சீர்திருத்தங்களைச் செய்தது, இராஜ்யத்திலுள்ள இரஸ்தாக்களை யெல்லாம் செவ்வைப் படுத்தியது, புதுக்குளங்களைத் தோண்டிப் பழைய குளங்களைத் தூர் வை யெடுத்தது, கல்விக்கு அதனிலும் விசேஷமாய்ப் பெண்கள் கல் விக்குத் தூண்டுகோலாக விருந்தது—இவைகள் எல்லாம்அவரைப்பற் றிப் புகழ்ந்து பேசச் செய்கின்றன. 1300-ம் பசலி அரசாட்சி அறிக் கைப்பத்திரத்தில் அவர் கூறியதாவது:—

"புதுக்கோட்டை இராஜ்யம் சிறிது. எனினும் அதன் விஷயங்கள் பல பெரியஇராஜ்யமாகிய திருவாங்கூர்ச்செய்திகளைவிட என் கவனத்தையும் கவலையையும் எடுத்துக்கொண்டன. அது எனக்கே அதிசயமாக இருக்கின்றது."

பத்து வருஷத்துக்கு முந்திப் பார்த்தவர்கள் இப்பொழுது பார்ப்பார்களே யாகில் 'அதுதானோ புதுகோட்டைப் பட்டணம்' என்று கூறி அதிசயிப்பர் என்பதற்குத் தடையே யில்லை. புதுப் பேட்டைகளும், உபநகரங்களும், புதுக்குளங்களும், புதுத்தெருக்களும் இவரால் உண்டாயின. தெருத்தோறும் விளக்குகளும், சந்திகளில் தீபநிலைகளும், பாதை பொழுங்கும், நகரிற் செல்வோர் மனதைக் கவரத் தக்கனவே. பட்டாளத்திருத்தமும் போலீஸ் பந்தோபஸ்துச் சீர்மையும் சாஸ்திரிகளின் நினைவை யூட்டுகின்றன.

மேன்மைதங்கிய பிரஹதாம்பாள் சகாயன் மார்த்தாண்டபைரவ தோண்டைமான் அரியாசனத்தேறிய 1894ஆ நவம்பர்மீ 27உ நமது சாஸ்திரியா ரவர்கள் வேலையை விட்டு நீங்கினர். அக்காலத்து சென்னைக் கவர்னரா யிருந்த வேன்லாக்குப் பெருமான் நமது சாஸ்திரியாருக்கு முகமனாக பட்டங்கட்டிக்கொண்ட இராஜாவைப்பார்த்துச் சொல்லியதாவது:—

"இன்று பட்டங்கட்டப்பெற்று அடைகிற இராஜ்யமானது 20-வருஷங்களுக்கு முன் அதிக க்ஷீணதசையி லிருந்தது. இப்பொழுது இருக்கப்பெற்ற விஷயத்தோற்றங்களோ அப்பொழுதிருந்தவற்றிற்கு முற்றிலும் மாறுபட் டிருக்கின்றன. கடனில்லாததும் 3-லட்சம் ரூ. கஜானாவில் இருக்கப்பெற்றதுமான இராஜ்யமொன்றைத் தாம் அடைகிறீர். இவ்விராஜ்யத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆவசியமான சீர்திருத்தங்கள் தென்படுகின்றன. அரசாட்சியி னொவ்வொரு பகுதியும் சீர்திருத்தப்பட் டிருக்கின்றது. அபசிறை விருத்தியாகி யிருக்கிறது, ரோட்டுகள் மிக்க நேர்த்தியாக விருக்கின்றன. பொதுஜன நன்மைக்கான கட்டிடங்கள் இரஜதானி நகரை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் காரணபூதர் நமது சாஸ்திரிகள் தான்"

வேலையைவிட்டபிறகு சாஸ்திரிகளுக்குத்தமது கட்டையை விடுவ தற்கு ஏறக்குறைய ஒருவருஷத்துக்குமுன் தான் கே. ஸி.எஸ்.

ஐ. ப் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. நமது சாஸ்திரியார் இறந்தமையைக் குறித்துச்சென்னை இராஜாங்கத்தார் பிறப்பித்த உத்திரவாவது.—

"கவர்ன ரவர்களும் கவுன்சிலர்களும் சர் சேஷய்ய சாஸ்திரிகள் காலஞ்சென்ற சமாசாரத்தை யறிந்து மிக்க விசனிக்கிறார்கள். காலஞ்சென்ற சேஷய்ய சாஸ்திரியார் 1848ஆ ரிவனியூ போர்ட் வேலைக்குப் புகுந்தார். 1894ஆ வரை நடுவில் சிற்சில காலம் நீங்கலாக இராஜ்யத்துக்கு உழைத்திருக்கிறார். நியாயமாகவும் புத்தி சாதுரியமாகவும் எல்லா வேலைகளையும் பார்த்தார். இந்த இராஜதானியில் அவர்காலத்திருந்த கவர்னர்க ளெல்லோராலும் புகழ்பெற்றிருக்கிறார். ஜனங்கள் க்ஷேமத்துக்கு மிக்க உழைத்திருக்கிறார். 1883ஆத்தில் சட்ட சபையின் அவயவியாகவிருந்தார். கவுன்ஸிலில் இவர் இடித்துக்கூறியவை சாமர்த்தியமும் பாரபட்ச மில்லாதவையா யுயிருந்தன. இவர் பிறர் பின் பற்றக்கூடிய உதாரண சீலத்துவத்தையும், கண்ணியதை பொருந்திய பெயரையும் தமக்குப்பின் நிலைத்துநிற்கும் வண்ணம் செய்திருக்கிறார்." கவர்னர்ஜெனரல் கர்ஸன் பிரபுவுக்காக அந்தரங்க மந்திரி நமது சாஸ்திரியின் புத்திரருக்குக்கொடுத்த தந்திச்செய்தி.—

"மிக்க கியாதிபெற்றவரும், இந்தியா சூழ்ச்சித் துணைவர்களில் முதன்மையானவரும், அநேக பொதுநன்மைக்குரிய விஷயங்களைச் செய்துள்ளவருமாகிய தமது தகப்பனர் காலமானதுகனம் வெஸ்ராய் அவர்களுக்கு ஆராத்துயரை உண்டாக்கியது."

சென்னப்பட்டணம் கவர்னருக்குப் பதில் அவர் பிரைவேட்செக்ரடரி எழுதுகிறார்:—

"இந்தியாவின் தென்பாகத்துக்கு மிக்கதேர்ச்சிபெற்றுத் தற்காலத்துக் கொப்ப நடக்கும் சூழ்ச்சித்துணைவ ரொருவர் இறந்து நஷ்டமுண்டானதைப்பற்றி மிக்க வருந்துகிறார்."

திருவாங்கூர் மகாராஜா எழுதியதாவது:—

"இச்சமாசாரத்தைக் கேட்டவுடன் துக்க சாகரத்தில் மூழ்கினேன். முதிர்ந்த சூட்சித் துணைவர் காலமானது ஜனங்களுக்கே ஏற்

பட்ட நஷ்டமாதலால் எல்லோரும் வருந்துவார்கள். என் க்ஷேமத்தையும் என் தேசக்ஷேமத்தையும் கோறி வந்த சிலாக்கியதை பொருந்திய நண்ப னொருவனை நா னிழந்தேன்."

"சாதல் வந்தடுத்த காலுந் தனக்கொரு சாதலின்றிப்
பூதல மிருக்குங்காறும் புகழுடம் பிருக்கும்."

"ஒன்ற உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில்."

ஸ்ரீநிவாசய்யர்.

---

## THE ORIGIN OF KODUNGALLUR TEMPLE.

### கொடுங்கல்லூர் ஆலயவரலாறு.

நம் உபன்னியாசத்துக்கு விஷயமாயிருக்கும் "கொடுங்கொல்லூர்" புராதன கிரீக்ஜாதியாரால் "மஸரிஸ்" என்றும் பிற்காலத்திய ஐரோப்பியரால் "கிறங்கனூர்" என்றும் பெயர்கொடுக்கப்பெற்றிருக்கின்றது. என் வரலாறு சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு புராதன காவியங்களிலும் தற்காலத்தில் யாரும் வாசித்துவருகிற கோவலன்கதையிலு மிருந்து வரையப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் பாடினவர் செங்குட்டுவன் என்னும் சேர ராஜனுடைய கனிடஷ் ஸகோதரனும் முந்தின அரசனான சேரலாதனுடைய மகனுமா யிருந்தவர். இவ்வரசிளங்குமரர் இளம்பருவத்திலேயே இவ்வுலகப்பற்றுகளைத்துறந்து துறவறம்பூண்டு இந்நூல் எழுதிய காலத்தில் "கணவாயிற் கோட்டம்" என்னும் சந்நியாசி மடத்தில் வசித்திருந்தார். மற்றக் காவியம் சாத்தன் என்னும் ஓர் நவதானிய வியாபாரி பாடினது. இவர் மகாவித்வானும் தேர்ச்சியடைந்த பரிசோதகரும் மதுரைக்கடைச் சங்கப் புலவரில் ஒருவரும், அக்காலத்தில் வித்வான்களை ஆதரிப்பதில் பெயர்போன சேரராஜன் அரண்மனைக்கவியுமா யிருந்தார்.

"கொடுங்கல்லூர்" என்றபதம், (கொடும்=கொடுமையான, கொல்=குற்றம், ஊர்=நகரம் என்னும் பதங்களாலாகிய) ஒரு சிதைவுற்ற செந்தமிழ்ச் சொல் என்று எண்ணுகிறேன். ஆகவே, இப்பதம் கொடுமையான குற்றங்கள் நிறைந்த ஊர்என்று பொருள் படுகின்றது. ஆனால் எல்லாவற்றிற்கும் திவ்விய வடமொழி உற்பத்தி கற்பிக்கிறசில மலபார் தேசாபிமானிகள் "கொடுங் கல்லூர்" என்றபதம் கோடிலிங்கம் நிறைந்தஊர் என்று பொருள்படுகிற "கோடிலிங்கபுரம்" என்னும் வாக்கிலிருந்து உற்பவித்ததாகக் கூறுகிறார்கள். இவ்விரண்டும் ஒன்றற்கொன்று மாறுபடுகின்றன வாதலின் கொடுங்கொல்லூரிலிருந்து கொடுங்கல்லூர் உண்டாயின தென்பது முற்கூறியவற்றைக் காட்டிலும் மிகப் பொருத்தமாயிருக்கு மென்பதே எனது துணிபு.

நான் அமைத்த பொருளினால் யாதாவது. ஒரு பெருங் குற்றம் அப்பட்டணத்தில் நடத்தப்பட்ட தென்ற எண்ணம் உண்டாகக் கூடாது. பாண்டிய ராஜாக்களின் தலைநகராயிருந்த மதுரையில்நடந்த ஒருபிராணச்சேத சம்பவக்கதை (Tragedy) யின் நாயகியினுடைய ஞாபகக்குறியாய் கொடுங்கொல்லூர் என்ற ஊரும் ஆலயமும் அமைக்கப்பட்டன வென்று பின்வருவனவற்றால் தெள்ளிதில் விளங்கும்.

சரிதவிவரணங்களில் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது அது நடந்த கால நிர்ணயம்:— இந்து காலகணிதம் (Hindu chronoeogy) ஒழுங்கின்மையாயிருத்தலால் இக்காலத்திய பண்டிதர்களின் ஆராய்ச்சியால் இக்குறைபாடு நீங்கும்படி கடவுள் அருள்புரிவாராக; ஆனாலும் நான்வரையப்புகும் சம்பவங்களின் காலநிர்ணயத்தை நேயர்கள் ஒருவாறு நிதானித்தறியும்படி தென்இந்தியாச் சரிதத்தில் சில முக்கியபாகங்களின் காலவரையறைகளைச் சொல்லத் தொடங்குகிறேன்.

என்னால் குறிக்கப்படும் காப்பியங்கள் பிறஇந்து நூல்களைப்போல கடவுள் வணக்கத்தோடு ஆரம்பிப்பன வல்ல. அந்நூல்களில் கூறப்படும் வணக்கங்கள்முதலில் சந்திரனையும் பின்னர் சூரியனையும் இறுதியில் வருணனையும் குறிக்கின்றன. அன்றியும் அமரர்கோமானாகிய இந்திரனுடைய பிரீதிக்காக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட உற்சவத்தை இவ்விருநூல்களிலும் மிகு அன்போடு வர்ணிக்கப்பட் டிருக்கின்றது. வேதம் எழுதப்பட்ட காலத்தில் இந்நூல்கள் வரையப்பட்டனவாக முற்கூறிய சங்கதிகளால் விளங்குகின்றது. இருகவிகளும் புத்தமதச் சார்பினரா யிருந்தமையால் கடவுள் வணக்கத்தோடு நூல் எழுதத் தொடங்கினார்களில்லை என்றும் எண்ணலாம். புத்தமத்தினரால் எழுதப்பட்ட ஜீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களும், செய்யுள் நடையில் எழுதப்பட்ட நன்னூல் நிகண்டு ஆகிய இலக்கண அகராதிகளும் அவ்விதவணக்கத்தோடுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் கூறப்பட்ட இருநூல்களிலும் அருகக்கடவுள் வணக்கம் கூறப்பட்டிருக்கின்றது. ஜீவகசிந்தாமணிஆசிரியர் அத்வைதமதச்சார்பினராய்ப் பிரம்மத்தைத்துதிக்கின்றார். முற்கூறியவற்றால் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் புத்த பிராணதிகளுடைய சங்கிரமகாலத்தில் உற்பவித் திருக்கவேண்டு மென்று யூகிக்கலாம். சிலப்பதிகாரம் புத்தமதத்தையும் புத்தமதாசிரியர்களையும் தற்செயலாகச் சொன்னது போலவும் ஒருவித ஆதரவோடும் குறிக்கின்றது. மணிமேகலையோ, அம்மத சித்தாந்தங்களை ஒரு ஜீவகசரித்திர பாவனையாகவும் ஒழுங்காகவும் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் இந்திரனையும், விஷ்ணுவினுடைய அதிசயமகிமையையும் வீரக்கடவுளான குமரக்கடவுளையும் குறித்துப் புகழப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு காவியங்களிலும் பிரம்மதேவனைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமுமில்லை. இக்காப்பியங்களின் மாதிரி

வட மொழி நூலாசிரியர்களுடையவும் அவர்களைப் பிற்காலத்தில் பின்பற்றின தமிழ்க் கவிகளுடையவும் மாதிரியைத் தழுவியிருக்கவில்லை. சிலப்பதிகாரகர்த்தாவான இளங்கோவடிகள் செங்குட்டவன் என்னும் அரசனுடைய கனிஷ்ட ஸகோதரனும் இருவரும் சேரலாதனுடைய மைந்தர்களும் ஆயிருந்தார்கள். அவருடைய தாய் கரிகாலன் என்னும் சோழதேசத்தரசனுடைய குமாரத்தி. இக்கதையில் முக்கியாங்கம் வகிக்கிற செறுக்குவியன் என்னும் பாண்டிநாட்டரசன் விவாக காரணத்தினாலே சோழதேசத்தரசனோடு சம்பந்தப்பட்டவன் என்று நம்ப 27 ம் அத்தியாயத்தில் சங்கதிகள் காணுகின்றன. இலங்கைத்தீவின் சரித்திரத்தின்படி கிறிஸ்தாப்தம் இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் பிரபலனாயிருந்த கயவாகு என்னும் அரசன் அக்காலத்தில் இலங்கைக் கதிபனாயிருந்தான்.

நம்சரித்திரகால நிர்ணயம் இன்னும் தென்னாட்டு மூவேந்தர்களான சேர சோழபாண்டிய ராஜாக்களுடைய தலைநகரங்களின் இட அமைப்பிலிருந்தும் நிச்சயிக்கலாம். இக்கதையாரம்பத்திற் சோழதேசத் தலை நகர்காவேரி நதியின் முகப்பில் காவரிப்பூம் பட்டணமாயிருந்தது. அந்நகர் அக்காலத்தில் கீழ்தேசத்தாரின் பெரிய வியாபாரபட்டணம். இந்த அழிமுகம் கப்பலகள் பத்திரமாய்த் தங்குமிடமா யிருந்தபடியால் இந்தியாவின் கீழ்க்கரையிலுள்ள துறைமுகங்களோடும் ஆசியா ஆர்கி பல்கே தீவாந்தரங்களில் பிரதானமான ஜாவாவோடும் சீனதேசத்தோடும் வியாபார விர்த்தியில் அமர்த்த ஒரு பெரியகப்பல் கூட்டம் எக்காலத்தும் அங்கே அமர்ந்திருக்கும் நம்முடைய கதை முடிவு பெறுங்காலத்தில் இந்நகரும் அழிமுகம் சமுத்திரத்தால் விழுங்கப்பட்டோஎரி மலை வெடிப்பினால் நாசமடைந்தோ போனதால் தலைநகர் காஞ்சீபுரத்துக்கு மாற்றப்பட்டது.

சேரதேசத்து அரசன் தலைநகரைப்பற்றிச் சொல்லுகிறேன். கோயம்பத்தூரில் கரூரும், கொச்சி ஸமஸ்தானத்தில் கொடுங்கல்லூருக்கு ஒரு மைலுக்கப்பாலிருக்கும் திருவஞ்சிக்களமும் முறையே அவ்வரசனுடைய தலைநகர்களாயிருந்தன. நாம் குறிக்கும் காலத்தில் இவைகளில் எது ராஜதானியா யிருந்ததெனத்தீர்மானிக்கவேண்டும். அரசன், இராணி, இளவரசு, கனிஷ்ட சகோதரன் இவர்களுடன் பிரபஞ்சத்தை அதன் இயற்கையான அலங்காரத்திற் கண்ணுற்றுக் களிக்கும்படி பிரயாணமானதாகவும், முதன் முதல் அவர்கள் சென்றடைந்தது மகாவிஷ்ணு கழுத்தில் அணிந்திருக்கும் வனமாலையை யொத்த பெரியாறென்றும், சிலப்பதிகாரம் 25 வது அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. உயரமான மலைகளிலிருந்து உற்பத்தியான இந்நதியின் இருகரைகளிலும் கோங்கு, வேங்கை, இலவங்கம் முதலிய மரங்கள் நிறைந்திருந்தன. ஆற்றின் நிரப்பில் நீரோட்டத்தினால் ஒதுக்கப்பட்டதும் ஒருவித அலங்காரம் வாய்ந்ததுமான மணல் பிரதே

சங்கள் அங்கங்கே சிதறுண்டுகிடந்தன. இதை பின்வரைந்திருக்கிறதுடன் சேர்த்துப்பார்த்தால் சிவகிரிமலையிலிருந்து உற்பத்தியாய் குத்துக்கல்லில்வைத்து இதியரா என்னும் நதியுடன் கலந்து இரண்டும் ஒன்ருய் திருவஞ்சிக்களத்துக்கு 10-மயிலுக்கப்பால் கொச்சிக் காயலில் விழுகிறதென்ற இவ்வாற்றின் விவரணத்துக்கு ஒத்திருக்கின்றது. கரூர் என்றபட்டணம் காவெரியும் அமராவதியும் சந்திக்கும் இடத்திலிருக்கின்றது. இராஜரீகப்பிரயாணிகள் இவ்விரு நதிக்கரைகளிலும் சென்றிருந்தால், இக்காப்பியத்தில் காவேரியைப் பற்றி வேருேரிடத்தில் சொல்லப்பட்டிருப்பதால் இவர்கள் பெயர் அங்கே சொல்லவேண்டியதாயிருந்தது தவிரவும் திருவாழுங்கொடு, கொச்சி இந்நாட்டு அரசர்கள் தங்கள் தேசத்தின் சுற்றிலுமுள்ள பிறநாடுகளில் எழுந்தருளும்போதெல்லாம் அம்மலைநாடுகளில் வாசஞ்செய்யும் வனவேடர்கள் வனவிளைவுகளான அநேக சாமான்கள் அவர்களுக்கு அடியிறை வைக்கிறதும் தங்களுடைய ஆடல் பாடல்களால் அவர்களைக் களிப்படையச் செய்கிறதும் ஒரு புராதீன வழக்கமாய் நடந்து வருவதுண்டு. செங்குட்டுவ அரசன் பெரியாற்றின் கரைகளில் எழுந்தருளியபொழுதும் இவ்வழக்கத்துக்கு விரோதம் எற்படவில்லை. இராஜன், பத்தினி, இளையவன் இவர்களோடு அழகான ஆற்றுமணலில் வீற்றிருந்தபொழுது வேடர்கள் கூட்டமாய் வந்து அம்மலைநாட்டுக்குரிய பலவித விசேடப் பொருள்களை அரசன்முன்னிலையில் சமர்ப்பித்தார்கள். அவைகளில் சிலவற்றை இங்குக் கூறுவோம். 1. யானைத்தந்தங்கள். 2. காரகில் சந்தனக் கட்டைகள். (3.) தேன்கூடுகள் (4) பச்சையிலவங்கம். (5) கூவை நீறு. (6) தேங்காய். (7) மாங்காய். (8) வாழைக்குலை. (9) வெள்ளுள்ளி. (10) பாக்குக் குலை (11) யானைக்குட்டிகள். (12) கடுவாய்க் குட்டிகள். (13) கரடி. (14) குரங்கு (15) கருங்குரங்கு. (16) காட்டாடு. (17) கழுதைப் புலி. (18) பூனை. (19) மயில். (20) கிளி முதலியவை. இராஜன் அடிக்கமலங்களில் அடியிறை வைத்ததும் அப்பிரதேசங்களில் உள்ளனவுமான விலங்கினங்கள் காய்கறிவகைகள்-இவைகளின் விவரச்சாரத்து (ஜாபிதா) நான் சரியாய்ச் கொடுக்க வில்லை. தென் இந்தியாவில் பல இடங்களில் முற் கூறிய பல வகைகளும் ஒவ்வொன்று ஒவ்வொரு இடத்திற் கிடைப்பதாயிருந்தாலும் மலபாரில் அவைகள் எல்லாம் உண்டென்பது மாத்திரமல்ல ஒரே இடத்திலும் காணலாம்.

இதற்கு முந்தின இருபத்திகளினும் நான் கூறிய சங்கதிகளினால் மலையாள தீரத்தில் (Malabar coast) வஞ்சி அல்லது திருவஞ்சிக் களம் சேரராஜனுடைய தலை நகராயிருந்ததென்று அறியலாம். இவ்வபிப்பிராயத்தை வற்புறுத்தவேறுசிலசங்கதிகளும் உண்டு. 1877 மாண்டில் உண்டான பெரும்பஞ்சம் இந்து தேசமுழுதும் வியாபித்து மரணம் அழிவு ஆகிய இரண்டையும்

தன் சக்தியால் எங்கும் பரவச் செய்தபொழுது திருவிதாங்கூர் கொச்சி ஆகிய தேசங்கள் மாத்திரம் பசியால் வாடித் தம்மிடம் சரணமடைந்த அனேகமாயிரம் ஜனங்களை அடைக்கலமாய் ஏற்றுக்கொண்டது யாவருமறிந்த விஷயம். தென் இந்தியாவின் கீழ்க்கரையிலிருந்து ஜனங்கள் திரளாக இங்கிலையில் ஓடிப்போனது இந்த ஒரு சமயத்தில் மாத்திரமல்ல' சோழ ராஜதானி காஞ்சிபுரத்துக்கு மாற்றப்பட்ட காலத்தில் மழையில்லாமல் நாடுவறண்டு பஞ்சத்திற்குள்ளானதாகவும், மனிதரும் மிருகங்களும் அதற்கிரையாயினதாகவும், அப்பொழுது மிஞ்சினிவர்கள் கஞ்சியில் புகுந்தார்கள் எனவும் மணிமேகலை 28-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கரூரைச் சுற்றியுள்ள நாட்டிற்கும் காஞ்சிபுரத்துக்கும் காலநிலையில் அவ்வளவாக வேற்றுமையின்மையால் சோழமண்டலக் கரையில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஜனங்கள் பஞ்சத்தால் குடியிளகிப்போக இடமேயில்லை. ஆகையால் பஞ்சத்தாலடிபட்ட ஜனங்கள் சோழதேசத்திலிருந்து திருவஞ்சிக்களத்துக்குப் போயிருக்கவேண்டுமென்பது சந்தேகமற்ற விஷயம். அன்றியும், கதாநாயகி வைகைக் கரையோரமாய் மேற்கே பிரயாணப்பட்டு சேர தேசத்திற் புகுந்து மலைநாடு அல்லது மலைபாறில் பிரவேசித்தாள் என்று சிலப்பதிகாரம் 23-வது அத்தியாயத்தில் இறுதியில் கூறப்பட்டிருக்கின்றது. தவிரவும் சோழதேசத் தலைநகரிலிருந்து நாயகியைத் தேடிப்போனதாய்காவ்வியத்தில் கூறப்பட்டிருக்கும் சில பெண்கள் முதலில் மதுரைக்கும் பிறகு வஞ்சிக்கும் போனார்கள். முற்காலங்களிலேயே ஜனங்கள் பாண்டிநாட்டிலிருந்து சேர நாட்டிற்கு காட்ஸ் (Ghauts) மலை வழியில் இலகுவாய் போக்குவரவுசெய்தார்கள் என்று இங்கே பிரஸ்தாபிக்கலாம். எங்ஙனமெனில், பூஞ்ஞாறு பந்தளம் ராஜாக்கள் பாண்டியதேசத்தரசனோடு எவ்விதமோ சம்பந்தப்பட்டிருந்ததாகவும் அவர்கள் (பாண்டியர்கள்) தங்கள் நாடு விட்டு திருவிதாங் கோட்டுக்கு வர நேர்ந்த பொழுது (காட்ஸ்)மலை வழி வந்தார்கள் என்றும் பந்தளம் ராஜாக்கள் ருங்கி வழி பிரவேசித்தார்களென்றும் காணப்படுகின்றன. பூஞ்ஞாற்று பிரபுவினுடைய தேசங்கள் மதுரை எல்லையை அடுத்திருக்கின்றதினால் இவ்விரண்டு தேசங்களுக்கும் இலகுவான போக்குவரத்துப் பாதை இருந்திருக்கவேண்டும். ஆலவாய் அல்லது மதுரைக்குரிய பிரதிபதமான ஆலவாய் ஆலயத்தின் லிங்கம் காட்ஸ்மலை வழி கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் சொல்லுகின்றார்கள். கடைசியாய் நாம் இப்பொழுதுகுறிக்குங்காலத்தில் செங்குட்டுவ அரசன்கூற்குஅல்லதுகுடகுதேசத்தையும் ஆண்டுகொண்டிருந்தார். கரூரிலிருந்து இந்நாட்டையாள்வது பிரயாசமாகத்தானிருக்கவேண்டும். ஆகவே. சேரதேசத்தரசனுடைய தலை நகரானவஞ்சி கரூர் அல்லவென்றும் திருவஞ்சிக்களந்தான் என்றும் இவ்வெல்லாச்சங்கதிகளாலும் ரூபிக்கப்படுகின்றது. சேரன் தலைநகர் பிற்காலத்தில் கரூரும் முற்காலத்தில் திருவஞ்சிக்களமும் ஆயிருந்ததென்பது சரித்திரத்தால் ஒப்பு

க்கொள்ளப்பட்ட விஷயமே. அறைகுறையான இக்குறிப்புகளை ஒழுங்கு படுத்தித் தர்க்கீகத்துக்குரிய முடிவுகளை அனுமானிக்கும் பொறுப்பை சாஸ்திரீகசரித்திராசிரியருக்கு அளிக்கின்றேன். பாண்டிய நாட்டின் தலை நகரைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லையே. மிகப்புராதீனகாலங்களில் கன்னியாகுமரிக்குத் தென் பாரிசங்களில் மதுரை என்னும் ஒரு நகர் இருந்து இப்பொழுது கடலினுல் அமிழ்த்தப்பட்டிருப்பினும் நம்முடைய சரித்திரத்துக்குரிய கூடல் கொற்கை என்னும் பெயர்களையுடையமதுரையானது இடைக்காலங்களில் நாயக்க அரசர்களின் தலை நகராயிருந்த வைகைக் கரையிலிருக்கும் தற்காலத்திய மதுரையேயாம்.

T. போன்னம்பலம் பிள்ளை.

---

# NATURAL HISTORY.
## THE COLOURS OF ANIMALS.
## ஜீவ ஜெந்துக்களின் நிறமும் அதன் பயனும்.

---

பண்டைக்காலந் தொட்டு ஆடுதலிற் பெயர்பெற்ற ஆண்மயில் மட்டு மழகிய தோகைகொண் டிருப்பதேன்? நல்லரவந் தனது படத்தை விரிக்க அதனிடையில் அரக்கன் கண்போ விரண்டு பயங்கரமான ரேகை தோன்றுவதேன்? பச்சோந்தி பன்முறையுந் தன்னிறத்தை மாற்றி மாற்றி யொளிப்பதேன்? சிலந்திப்பூச்சியிற் சில எறும்பைப்போல் வேடம்பூண்டு பார்ப்போரை ஏமாற்றுவதேன்? இன்னினவினுக்கட்கு ஒருவாறு விடைபகர்வான் எடுத்துக்கொள்ளப்பட்டது இச்சிறு வியாசம். ஒவ்வொரு பிராணியும் ஒரேவர்ண முடையதும் பலவர்ணங் கலந்ததுமாய மேனியதாம். அவ்வர்ணத்தால் அதற்கு எத்துணை பயனுண்டாம் என்னும் விடயத்தைப் பற்றி யோசித்தல் வேண்டும். வர்ணங்களால் ஜீவ ஜெந்துக்களுக்கு முதன் முதல் யாதாமொரு பயனிருந் திருக்குமோ என்பதைப்பற்றி நிச்சயமாய் இப்போது சொல்லுவ தரிது. ஆனுல், சில மட்டும் தம்மிடத்துள்ள ஓர்விதச் சக்தியால் முதலில் தாங்கொண்ட நிறத்தைச் சிறிது சிறிதாய் வேருக்கி அம்மேனியால் தமக்கோ பிறர்க்கோ பயனுண்டாக்கு கின்றன வென்பது பின் வருவனவற்ருல் விளங்கும் என்பது எமது அபிப்பிராயம்.

ஜீவப் பிராணிகளின் நிறத்தை அதினு லுண்டாம் பயனுக்குத் தக்கவாறு பிரிவு செய்திருக்கிருர்கள். அப்பிரிவுகளில் முக்கியமானவை ஆறேயாம். அவையாவன:—

1. பயன்படாநிறம்; 2. தற்காப்புநிறம்; 3. வசீகரநிறம்; 4. எச்சரிக்கைநிறம்; 5. போலிநிறம் அல்லது பொய்நிறம் அல்லது கபடவேஷம்; 1. சம்யோகநிறம். அதில் ஒவ்வொன்றைப் பற்றியுஞ் சில சொல்லுவோம்.

(6) Non-significant coloration :—

காக்கை கருப்பா யிருப்பதினுலேம், அதற்கு இந்த நிறத்தால் யாதானும் பிரயோஜன முண்டா என்ற கேள்விக்கு இல்லையென்றே உத்தர முரைத்தல் தகுதியாம். இத்தகைய நிறத்திற்கு **பயன்படா** நிறமென்று சாஸ்திரிகள் சொல்வார்கள்.

(2) Protective coloration :—

தாங்கொண்ட வர்ணத்தால் தம்மைத்தம் மெதிரியிட மிருந்து காப்பாற்றிக்கொண்டு சுகமாய்க் காலங் கழிக்கின்றன சில பிராணிகள். இங்ஙனம் பயன்படும் வர்ணத்திற்குத் **தற்காப்பு** நிறமென்று (Protective coloration) பெயர்கொடுக்கலாம். மரங்களின் பசுமை வாய்ந்த இலைகளினிடையே இலைக்குந் தனக்கும் பேதம் புலப்படா வண்ணம் பச்சைப்பாம்பு காலங்கழிக்கின்றது. அஃதைச் சுலபமாய் இலைகளின் மத்தியில் காண்பது மிக வரிதாம். கூர்மையான கண்ணுள்ளவர்களே அது மரங்களின்மேல் நெளிந்தோடுவதைக் கண்டு ஆச்சரியப்பட் டிருப்பார்கள். இன்னுமோர் பாம்பு பாலைவனங்களிலும் மணற்சாரலான விடங்களிலும் வசிக்கும். அதை நம்மவர்கள் இரட்டைத்தலைப் பாம்பென்று சொல்லி ஆறுமாதம் முன்புறத்தாலும் பின்னுறுமாதம் பின்புறத்தாலும் ஊர்ந்து காலங் கழிக்குமென் றுட்கொண்டு இப்பெரும் பொய்யை மெய்யென்று நம்புகின்றனர். மற்றப் பாம்புகளின் வாலைப்போல் இதன்வால் கூர்மையா யிராது. சற்று கூளையாயிருக்கும் அதன்பேரில் கண்கள்போன்ற இரண்டு கறுத்த புள்ளிகளுண்டு. இதைக் கண்டு மயங்கி வாலையும் தலை யென்பார்களோ? இம்மணற்பாம்பு தன்னைச் சுற்றிலுமுள்ள மணலின் நிறத்தையே கொண்டது; மணலில் விழுந்து புரளுங்கால் மணலினின்றும் இதை வித்தியாசப் படுத்திக் காண்பது மிக்க கஷ்டமாம். இங்ஙனமே தம்மைச்சுற்றி யிருக்கும் பொருள்களி னிறத்தை மேற்கொண்டு வாழ்வன, தோட்டங்களிற் செடிகண்மே லகப்படுஞ் சில சிலந்திப் பூச்சிகளாம். சில சிறு கொம்புகள்போலும், சில சிறு விதைகள்போலும், சில சிறு பூவரும்புகள் போலும் வேஷங்கொண்டு பார்ப்போரை ஏமாற்றுவன.

கோயமுத்தூர், பழனி, நீலகிரி முதலிய இடங்களில் இலைப்பூச்சியென்று ஒரு பிராணியை சாதாரணமாய்க் காணலாம் அதற்கும் அது தின்னுமிலைக்கும் ஒருவித மாறுபாடுங் காண்பதரிது. நங்கண்களுக் கெதிரிலேயே இலையைத் தின்றுகொண் டிருக்க அதை நாம் காண்பது மிகவும் அசாத்தியம்

மான கருமமாம். இதைப்போலவே செடிகளில் வசிப்பது இன்னொரு பூச்சி. அதைக்குச்சி அல்லது கொம்புப்பூச்சி (அதற்குத் தயிர்கடையும் பூச்சியென்றும் தேவடியாப் பூச்சி யென்றும் பெயர். என்பார்கள். அதற்கு ஜெபப் பூச்சியென்னும் மறுபெயரு முண்டாம். இப்பெயர் வரவேண்டிய காரண மென்னவோ ? நாம் ஜெபஞ் செய்யுங்கால் இரண்டு கைகளையுங் கூப்புவது போல், அது உட்காரும்போது தன் முன்னிரண்டு காலையுஞ் சேர்த்து உயரத்தூக்கி உட்காரும். இது இலையுருவங் கொள்ளாது கொம்புகளைப்போல் நீண்டு மெலிந்து உருக்கொண்டு செடிகளில் வாசஞ்செய்யும்.

குளிர்காலம் நெருக்கவே, எங்கும் பனிக்கட்டி விழுந்து ஒரே வெண்மையா யிருக்க அதற்குத் தக்கவாறு உத்தரப் பிரதேசங்களி லுள்ள மிருகங்களும்பட்சிகளும் தங்கள் நிறத்தைச்சுத்த வெண்மையாக மாற்றிக்கொள்ளும். மறுபடியுங் கோடைகாலந் திரும்ப, முன் தாங்கொண்ட மேனியை யடைவனவாம்.

கடலின் மேற்புறத்து, முதுகெலும் பில்லாச் சில பிராணிகள் சீவிக்கின்றன. அவற்றைப் பெரும்மீன்களும் மற்றைய கடல் வாசிகளும் ஆவலா யுண்ணு மாதலால், எதிரியிடமிருந்து தப்பி யோடிப் பிழைக்கும் பொருட்டு இவற்றுட்சில கண்ணாடிபோல் தெளிவான தேகமுடையன. தண்ணீருக்கு மேலிருந்து இவற்றின் வழியாய்ப் பார்க்கக் கடல்நீரின் நிறந்தோன்றும் ; கீழிருந்து பார்க்க ஆகாயத்தின் நீலவர்ணம் புலப்படும் ; ஆகவே எவ்வண்ணம் நோக்கினும் இவற்றின் சுய உருவந் தோன்றாது. இவ்வித உதாரணங்களை இவ்வகுப்பிலே சேர்க்கவேண்டும்.

இன்னுமோ ருதாரணம் ; பிறகு வேறு பிரிவுகளைப் பற்றி எழுதுவோம். இந்த வியாசம் படிப்போர் கணவாய் மீன் என்னு ஒரு கடல் வாசியின் பெயரைக் கேட்டிருப்பதே அரிதென்றால் பார்த்திருக்கவே மாட்டார்களென்பது திண்ணம். பட்டிணத்துச் செம்படவர் அதைக் "கடமான்" (கடல்மான்) என்று அழைக்கின்றனர். அதன் தலையைச்சுற்றிலும் பத்துக் கைகளும், தலையின்மீது விசாலமான இரண்டு கண்களு முண்டு. கண்கள் மானின் கண்களைப்போ லிருப்பதால் இதற்குக் கடமானென்று பெயரிட்டார்கள் போலும் ! பச்சோந்தியைப்போல் கணவாய் மீனும் தன் னிறத்தை யடிக்கடி மாற்றும். விநோத தீபிகையில் (Magic lantern) நாம் பலமுறையும் பார்த்திருக்கும் சில சுழலும் புஷ்பங்கள்போல இதன் நிறம் கண்ணைப் பார்க்கு மளவும் இடைவிடாது மாறும். இந்த வேடிக்கையைக் கண்ணுற்ற இதன் எதிரிகள் "இஃதென்ன. ஓரிராக்கதன்போலும்! கிட்டநெருங்கினால் விழுங்கிவிடும்" என்று எண்ணித்துப் பல திக்குகளில் ஓடும். ஆனால் இது மாய வித்தை யென்றறிந்த சில பெரிய மீன்கள் கடல்மானை விழுங்கப் பின்றொ

டர்ந்தோடும்; அக்காலத்துக் கடல்மான் வேறொருபாயத்தால் மீனை வென்று ஓடியொளியும். எதிரியைத் தன்னருகில் கண்பதும், தன்னிடத்துள்ள மைநி றைந்ததை ஓர் பையைத்திறக்கவே, அந்தோ! கறுப்புமை கடல்நீரில் கலக்க இதைச் சுற்றிலும் இருளடர்ந்துபோம். அவ்விருளில், துரத்தும்மீன் வழி தடுமாறித் திகைத்துநிற்க, கடல்மான் கண்ணுக்கெட்டாத தூரம் நீந்தி யோடி மறைந்துபோம், என்ன வாச்சரியம்! இவ்வண்ணமே கடவுளும் நம் மை மாயையாகிய இருளில் நிறுத்தி நாம் அங்கொன்றுந் தெரியாது பிர மித்து நல்லவழி காணாது வருந்தத் தான்மறைந் தொளிந்து வேடிக்கை பார்க்கிறார்!

(3) Aggressive coloration:—

இனிச் சில ஜீவஜெந்துக்கள், தந்நிறமே காரணமாகிய சில வுபாயத்தால் பிற பிராணிகளை வசீகரித்து அவை கிட்ட நெருங்கவே அவற்றைத் தம்மிரை யாக்கிக் கொள்ளுகின்றன. ஆசியாகண்டத்துச் சில பாலைவனங்களில் மணல் வர்ணங்கொண்ட ஓர் பல்லியுண்டு. அதன் வாயினிரு மூலைகளிலு மிரா நின்ற மிகச் சிவந்த விரண்டு ரேகைகள் தூரத்துப் பார்வைக்கு அழகிய மலர்கள் போற்றோன்றும். பூவின் தேனைக் குடிக்க வலைந்து திரியுஞ் சில பூச்சிகள் அப்போலி மலர்களைக் கண்டு மயங்கிச் சமீபத்து நெருங்கவே வஞ் சனையிற் றேர்ந்த மணற்பல்லி பூச்சிகளை மிகக் களிப்புடன் தின்னும். தூண் டிற்கார மீனென்று பெயர்பெற்ற ஒரு மீனும் இதே மாதிரி சூது செய்கின் றது. இதன் வாயைச் சுற்றிலும் ஓயாது அசைந்தாடுஞ் சிம்புகளுண்டு. அவற் றைச் சிறு புழுக்களென்று நம்பி வேறு சிறுமீன்கள் தின்னுவதற்காக அருகா மையிற் போனவுடன், "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற் கேற்ப, தா மே இரையாகிவிடும்.

வேசையரின் கபடத்தையும் மோசக்கருத்தையுஞ் சிறிது மறியாது மா னிடரிற் சிலர் அவர்கள் வலையிற் சிக்கித் தமது பொருள், மாண்பு, தேக சௌக்கியம் முதலியவற்றை யிழப்பது மல்லாமல், தமது உயிரை ஒவ்வோ ரமயத்து அவர்கட்குப் பலிகொடுக்கிறார்க ளன்றே!

(4) Warning coloration:—

சில பிராணிகள் தாங்கொண்ட வர்ணத்தால் பிறரைப் பயமுறுத்து கின்றனவாம்; "என்னருகில் வரேல், வரினபாயம்" என்று எச்சரிக்கை தத்தமது நிறங்களால் செய்கின்றன. விஷப்பாம்புகட் கெல்லா மரசனாகிய நல்ல பாம்புக்கு, இந் நல்ல குணம் பற்றியன்றே அப்பெயர் வந்தது. ஒருவ ரைக்கண்டதும் சீறிக்கொண்டு படத்தை விரித்து ஓடிவருகின்றதே, அது விஷத்தால் தீண்டி உயிரை மாய்ப்பதற்கே அங்ஙனஞ் செய்கின்றது என்று

கொள்வது சரியன்று. ஏனெனில், அது நமக்கு அபாயத்தைப்பற்றி அதனுல் எச்சரிக்கை செய்கிறதே யொழியக், கண்டதையெல்லாம் விஷத்தால் தீண்டிக் கொல்வதற்காகவன்று. நஞ்சானது அடிக்கடி அபரிமிதமா யுண்டாகாது; கொஞ்சங்கொஞ்சமா யதனிலும் சாவகாசமா யுண்டாகும். கண்டவற்றையெல்லாம் அவ்வளவு அரிய விஷத்தால் தீண்டி வீணுக்குவதில் நல்ல பாம்புக்குப் பிரியமிராது. ஆகவே அதை எவ்வளவுக் கெவ்வளவு மட்டாய்ச் செலவிடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பாம்பிற்குப் பயனுண்டாம், இந்த நற்குணம் பற்றியே, நமக்குத் தகுந்த எச்சரிக்கை செய்து, தன் விஷத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறது. இதற்கு முக்கிய காரணமா யிருப்பது இதன் படமாம். இதை விரித்தாட, அதன் பேரிலுள்ள இரண்டு கண்கள் போன்ற ரேகைகள் பார்ப்போரைப் பயமுறுத்துகின்றன.

தன்னிடத்திராகின்ற ஓர் கெட்டகுணத்தைப் பிறரறிந்து விலகிப்போம் பொருட்டே நஞ்சு நிறைந்த கடற்பாம்புகள் பலவித வர்ணங்கொண்டு வாசஞ் செய்கின்றன. இவற்று ளொன்று கடித்தால் உடனே மரணமுண்டாகும்.

அமெரிக்காவின் உஷ்ணப் பிரதேசங்களில் பவளப் பாம்பென்று ஓரரவமுண்டு; அது கொடிய விஷமுள்ளது; மிகக் கறுத்ததும் சிவந்ததுமுமான மேனியையுடையது. இத்தகை வெறுப்புள்ள குணங்கள் பற்றியே வண்ணுத்திப் பூச்சி, பட்டுப்பூச்சி யிவற்றின் புழுக்கூடுகளிற் சில சுத்த தங்கமயமாய் விளங்குகின்றன. இஃதை யறிந்த பறவைகள் அவற்றைக் கையாலுந் தொடாவாம்.

இராக்காலங்களில் நமது வீடுகளில் ஒடுஞ்சிறுவண்டை யாவரும் பார்த்திருக்கக் கூடும். அதன்மேல் இரட்டை வரிசையாய்க் கறுப்புப்புள்ளிகள் வெகு தீர்க்கமாய்த் தோன்றும் இது இவ்வாறு வர்ணங்கொண்டது தன்னிடதுள்ள ஒரே கெட்ட குணத்தைப் பிரசித்தப்படுத்தும் பொருட்டாம். அதாவது, அகஸ்மாத்தாய் அதை யாரேனுந் தொட்டால், அதன் பின்புறத்தினின்று உடனே "வெடீர்" என்ற சத்தத்துடன் ஒரு விஷத்திராவகம் வெளிவரும்; அது நமது கையைச்சுடும்; சிறு பூச்சிகள் மேற்பட்டால் அவை யுடனே உயிர்துறக்கும். இங்ஙனஞ் சத்தம்பண்ணுவது காரணமாக இதற்குப் பீரங்கி வண்டென்றும் பெயராம்.

(5) Mimicry.

இன்னுஞ் சில பிராணிகள் மற்றவற்றைப்போல் வேடந்தரிப்பன. சில சிலந்திப்பூச்சிகள் எறும்புபோலும், தேனீபோலும், குளவிபோலும் வேடம் பூண்டு அவற்றோடு வித்தியாச மின்றிக் கலந்து அவற்றில் சிலவற்றை

நூலாற் சுற்றித் தமக்கு இரையாக்கிக்கொள்ளும். இவ்விதம் மித்திரபே தஞ் செய்யுஞ் சிலந்திப் பூச்சியின் கபடத்தை எறும்பாவது தேனீயாவது சிறிது மறிந்திலது:

(6) Colours used in courtship.

கடைசியாக, சில ஜீவஜெந்துக்களின் வர்ணமானது ஆண் பெண்ணைக் கவருவதிற் பயன்படுகின்றது. சிலந்திப் பூச்சிகள் தம் வீரச் செய்கைகளாலும் சிலம்பாட்டங்களினாலும் மணப்பெண்ணின் கையைப் பிடிக்கும். சில ஆண்பறவை தம தினிய குரலாற் கானங்கள் பாடித் தம்மனையாட்டியரைக் களிக்கச்செய்யும். இவ்வண்ணமே தமது அழகிய மேனியைக் கண்டு பெண்டீர்கள் ஆசைகொள்ளும் பொருட்டுத் தஞ்செவ்விய தோகை விரித்தாடுகின்றன ஆண்மயில். எதனுடைய தோகை மிக வழகா யிருக்கின்றதோ அதனையே கைப்பற்றும் பெண்மயிலும். இது காரணம் பற்றியே சாதாரணமாய், பெட்டைகளினும் ஆண்பறவைகள் வனப்பு வாய்ந்திருக்கின்றவாம்.

பல பிராணிகட்கும் பலவாறு தாங்கொண்ட வர்ணமானது பயன்படுகின்றதென்பது மேற்சொன்ன உதாரணங்களாற் றெள்ளிதிற் புலப்படும். இடமில்லததால ஈங்கெடுத்துரைக்கப்படா வேறு உதாரணங்கள் அநேகமுள. அவற்றையெல்லாம், இச்சிறு வியாசம் படிப்போர் தாமே கண்டு களிப்பார்களென்பது எமது கோரிக்கை,

V. நரசிம்மையங்கார்.

---

## BACON'S ESSAYS I.

## வியக்கோன் விரியுரைகள் I.

### உண்மை.

'உண்மையாவது எவன்' என எளிதம்பட வினவினானாய் விடை பெறுவான் பொறுத்து நிற்க விருப்பிலன் ஆயினான் (2) வேலவன் என்பான். (3) தன்விருப்பம் என்பதைச் செய்கையினே அன்றி நினைவினும் நச்சி நிற்பாராய் உட்சுழற்சியில் இன்புறுவாரும் யாதானும் ஒரு கோட்பாட்டை நெஞ்சத்து நிறுவிக்கோடல் கட்டுப்படுகையே என எண்ணுவாரும் உளரன்றே.

அவ்வினத்து (4) எண்ணுளர் குழாங்களோ (குலைந்து) போயினவேனும் ஒத்த (5) கறை நரப்புடையராய் (அலையென) ஆடுமுளமுடைய் சில

1. வியாசங்கள் வியாசம்=விரிவு (2) இலத்தீன் மொழியில் பிலாத்து (Pilatus) என்பர்=Pilum=வேல் (3) சுயேஷ்டம் (4) தத்துவஞானிகள். எண்சாங்கியம் என்பதற்கு இணை (5) கறைநரம்பு=நாளம்.

சுனுகர் உளராமே, தம்பால் தொல்லோர் நரம்பினிருந்த அத்துணை செம்பால் இலதாயினும்.

2. மக்கள் பொய்யைக் கவர்தல் யாதனுல் என்பீரேல் மெய்காண்டல் அரிதாதலானும் அதற்கு அவர்கள் உழைக்கும் உழைப்பானும் மற்றுங்கே காண்டக்கால் அம்மெய் அவர்கள் நெஞ்சத்துப் படுத்துந்தளைப் பாட்டானுமே அன்றி பொய்யினையே நச்சும் (ஊழ்த்த எனினும்) இயல்பினுளதாய் நச்சானும் என்க.

கிரேக்கரது எண்ணுளர் குழாங்களுட் பிற்றை நாளிலுள்ளனவற்றைச் சார்ந்த ஒருவர் மெய்ப்பொருளைச் சூழ்ந்து பார்ப்பாராய், பொய்யானது புலவர் பாவிற்போல் இனிமை கூட்டுவதற்கேனும் விலைஞர் நாவிற்போல் நயங்காட்டுவதற்கேனும் துணை புகாதுழியும் பொய்யின் பொருட்டே பொய்யை நயப்பராம் மாந்தர் எனின் அதனிடத்து என்னதான் உண்டோ என்று எண்ணி எண்ணி மயங்கி நிற்பாராயினர்.

எம்மாலும் தெரித்தல் இயலாது ஆயினும் (உண்டாட்டுக் களியாட்டு நாட்களில்) உலகத்தின் கண்ணே நிகழும் மைப்பூச்சுகள் கைகாட்டுகள் உலாக்கள் ஆகிய காட்சிகளை (அற்போது) மெழுகு திரிகளது ஒளி எத்துணை அழகும் இனிமையும் ஆனவை எனத்தோற்றஞ் செய்யுமோ அத்துணையது அரைமடங்கு தானும் தோற்றஞ் செய்யாத வெட்ட வெளியிற் பட்டப் பகலொளி என்றே இவ்வுண்மையை இயம்புவாம். உண்மையானது பகற்பொழுதிலேயே மிக்க ஒண்மையாத் தோன்றும் பரவத்தினது விலைக்கு வருகினும் வரும். ஆயினும் அஃது, வெவ்வேறு (வயின் தொறுங் காலும) ஒளிகளின் மிக்க பொலிவாத் தோன்றும் (6) வன்மணி அல்லது (7) செம்மணியினது விலைக்கு எழவேவொட்டாது.

3. பொய்க்கலப்பு எஞ்ஞான்றும் இனிமை கூட்டுமே கூட்டும். வீண் எண்ணங்கள், முகமன் சொல்லொப்ப இனிமை யீனும் பொய் நம்பிக்கைகள், பொய்யான விலைகட்டுகள், நாடிய வாறெலா மாட்டிவரும் (8) அகக் குரங்கின் ஆட்டங்கள் ஆகிய இவையும் அன்னபிறவும் மாந்தருளங்களினின்றும் நீக்கப் படுமாயின் தொகையான மாந்தருடைய உளங்கள் மிக்க வாட்ட முற்றுச் சுருங்கி உறுதுயர்க்குஞ் சோர்வுக்கும் இருப்பிடமாகித் தமக்குத் தாமே வெறுப்பைத் தருவனவாகும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடுண்டா? (கிறீஸ்தவ) ஐயருளொருவர் பா என்பது பைசாசதிராக்ஷ ரசம் என மிகக் கொடுஞ் சொற்கொடு கூறினராயினர். அகக் குரங்கை ஊட்டி வளர்ப்பதாதலான் எனினும் பொய்யினது சாயலாற்றானே ஊட்டிவளர்ப்பதாகும்

(6) வயிரம் (7) மாணிக்கம் (8) விபாவனைகள்.

தீங்குவிளைவிப்பது எது எனின் நெஞ்சத்தூடாக்கழிந்து போகும் பொய்ய தன்று, அதனிடத்து ஆழ்ந்து வேர்க்கொள்ளும் பொய்யதே. இன்னதைப் பற்றியேயாம் முன்னம் இயம்பினர்.

4. பொய்ம்மையும் பொய்க்கலப்பும் ஆகிய இவைகள் மாக்கள் அழுக்குற்ற அறிவு விருப்புக்கு இனியவாங்கே இருப்பினும் தன்னைத் தான் உள்ளபடி யறிவதாம் உண்மையானது அறிவூட்டுமாறு உண்மையை (உயிர்த்துணையாக்க) (9) அன்பின் விழைதல் அல்லது (10) விழைவிற்றேடல் ஆகிய உண்மை யாராய்ச்சியும், (நங்கையது நலனை) முன்னிலையிற் கண்ணுறலாகிய உண்மையுணர்வும், (அஃளால்) இன்புறுதலாகிய உண்மை நம்பலும், மாந்தரியல்புக்குரிய நலனில் இறைநலனேயாம்.

5. கடவுள் நாட்களில் நடாத்திய படைப்பின் முதன் முதலாகக் கட்புலனும் ஒளியையும் ஆக்கினர். அதன்பின்னர் அவர்க்கு என்றுமுள்ள ஓய்வுநாட்டொழில் தம்தூய ஆவியின் ஒண்மை நல்குதலேயாம்.

முன்பொய்ப்பொருள் அல்லது இருட்பிழம் பின்மேலும் பின் மண்ணவன் முகத்துளும் ஒளியைக் கான்றார். இன்னும் தெரியப்பட்டவ ராகும் தம்மவர் முகத்துள் ஒளியைக் கான்றும் புகட்டியும் அருள் செய்யா நிற்கின்றார்.

6. (11) மற்றையவகையான் ஏனையவற்றிற்குக் கீழதே எனப் பாலதாய தங்குழாத்தைச் சிறப்பித்த (லேக் கிருஷியர் என்னும்) பாவலர் உச்சவளம் பெறச் செப்பியதாவது "கடன்மேன் மரக்கலங்கள் ததும்புவதைக் கரைமேனின்று கண்ணுறல் இனிதே; போர்முகத்தையும் ஆங்கு (மாறலை யொப்ப) மாறிவரும் வெற்றிதோல் வுகளையும் ஓர் அரணகத்தே பல்கணியண்டை நின்று கண்ணுறல் இனிதே; ஆயினும் பள்ளத்தாக்கிலே உள்ளனவாம் வழூஉக்கள், அலைவுகள், (12) பனிச் செறிவுகள், (13) புயன் மோதுகை ஆகிய—இவையிற்றினை எப்போழ்தும் தெளிவும் அமைவும் பொருந்திய காற்றுடைத்தாய் எய்வினை எறிவினைக்கு எட்டாத குன்றாகும் உயர் நிலையினின்று காண்டற்கு ஒப்பிடத்தகும் இன்பம் ஒன்றும் இல்லையே. இக்காட்சியானது பூரிப்பு அல்லது பெருமை கொண்டிராது எக்காலும் தண்ணளியே கொண்டிருக்குமென்றால்.

ஒருவன் உளமானது அன்பிற்றுவண்டு திருவுளத்தாறுதலடைந்து உண்மையை நடுக்கம்பாக்கி அதனிடத்தே தானோர் உண்டையாய்ச் சுற்றி ஒழுகுமாயின் அவ்வொழுக்கம் மண்ணில் விண்ணிடை வீடன்றே.

---

(9) நேசங்காட்டல், நயத்தல் - (10) மணம் வினவல் (11) உணமை நயப்பு அல் லத, இப்பாவலர் புகழொளி இருந்திலதாயின் என்பது பொருள் (12) அவிச்சை மா யை என்பவற்றைக் குறிக்கும் (13) கர்மம் கோபம் முதலியவற்றின் கொடுமையைக் குறிக்கும்.

7. இறைவனறிவுக்கும் எண்ணறிவுக்கும் உரியதாம் மெய்யுணர்தலைக் குறித்தே இதுகாறும் மொழிந்து வந்தாம். இப்பால் மக்கட்பரப்பினுண்டாகு முயல்வினைக்குரிய வாய்மையைக் குறித்து மொழிகுவாம். வெளிப்படையும் நேர்மையுமாக நடத்தல் மக்களியல்புக் குரிய மாண்பிற் கனத்தமாண்பென்றும் வலியேற்றி நயஞ்செய்வதாயினும் மாற்றைச்சிறக்குவதாகிச் செம்பொன் வெண்பொற்காசிற் சேர்ந்திருக்குங் கலப்பைப் பொய்க்கலப்பு மானுமென்றும் அறிக்கையிடுவர் மேற்சொல்லிய நடைப்பயின்று வாராதாராகிட ஆவர்கடாமும். சுற்றும் சுழலுமான பொய்யின்வழிகளானவை காலால் நடவாது அகடுமெண்ணுற ஊர்ந்து போங்கீழ்மை யுடைய அகடூரியினது போக்கென இருத்தலான்.

பொய்யன் என்றும் நம்புக்கிரண்டகஞ் செய்தவன் என்னும் கண்டுபிடிக்கப்படுவது போல மன்னுயிரை வெட்க மெனும் போர்வையான் மூடிவிடுவதாய தீவினை ஒன்றும் இல்லையே ஆதலானே மூந்தையனூர் என்பவர் பொய் பொய் எனும் கிளவி அந்நீர இழிச்சொல் ஆயினமைக்கும் அந்நீர பகைப்படு பழிச் சுமை ஆயினமைக்கும் அடி எவன் என்று தாம் ஆராய்ந்து பார்த்துழி அணி பெறநவில்வதாவது:—

ஒருவன் பொய் புகல்கின்றான் என்பது உள்ளத்து உறுத்துக்கிப் பார்க்குங்கால் அவன் விண்ணவற்கஞ்சா வன்னெஞ்சன் எனவும் மண்ணவர்க்கஞ்சும் பெண்ணெஞ்சன் எனவும் இயம்புதற்கு இணையேயாம்." என்னை? பொய்யெனப்படுவது விண்ணவனை எதிர்த்து மண்ணவனை அஞ்சியொடுங்கலான்.

7. கிறீஸ்து ஆண்டவர் வரும்போது "மண்ணின் கண் வாய்மை காண்பிலர்" என முந்துறவே மொழியப் பட்டுண்மையான் பொய்ம்மையும் நம்புக்கிரண்டகஞ் செய்கையுமாகிய தீவினையே நடுக்கேட்பை மன்பதை மாட்டுவரவழைக்கும் கடைமுரசியம் என்பதினுற்போல அவ்வினையை உயரணிபட உரைத்துக் காட்டல் கூடாதன்றே.

S. W. குமாரசுவாமி.

---

# ON THE TWELVE NAMES OF THIRUMAL IV.

## திருமாலின் பன்னிரு நாமப் பொருள் விளக்கம்.

### க0-வது நாமம் இருஷீகேசன்.

**இருஷீகம்:** இவ்வடசொல் ஹிருஷ் எனுந் தாது (வினைப்பகுதி) வால் உண்டானது. ஹிருஷ் என்பதற்குச் சந்தோஷ மடைதல் என்பது பொருள்.

எதனுல் மனிதர்கள் ஸந்தோஷத்தை யடைகிறூர்களோ அதற்கு இருஷீகம் எனப் பெயர்; அதாவது இந்திரிய மென்பதாம். இந்திரன் என்பது ஆத்துமாவின் பெயர். அதற்கு அடையாளமா யிருப்பது தான் இந்திரியம். ஆத்துமா இல்லையானுல் இந்திரியங்கள் தொழில் செய்ய வழியில்லை.

(க) ஜீவன் இந்திரியங்களுக்குச் சாக்ஷியாயிருப்பதால் ஈசனுகின்றுன். இதனுல் இருஷீகேசன் என்பதே ஜீவனுக்குப் பெயரென்பதும் ஒருபொருள்.

(உ) எவன்வசத்தில் இந்திரியங்களிருக்கின்றனவோ அவனுன பரமாத்துமாவே இருஷீ கேசன் என்பது மற்ருெரு பொருள்.

(ரு) சூரிய சந்திர வடிவங்களில் உலகங்களைக் களிப்பிக்கும் கேசங்களாம் ரச்மிகள் அதாவது கிரணங்கள் இருக்கின்றன; அவைகளால் உலகத்தவரை எழுப்புவனும் தூங்குவிப்பவனும் எவனே அவனுகிய பரமபுருஷனே இருஷீகேசனென்பது வேருெரு பொருள். இது மோக்ஷ தன்மத்திலுள்ளது. ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் இப்படி உரை செய்திருக்கின்றுர்.

### புருஷ சூக்தம் சச கடு-வது மந்திரங்கள்.

சந்திரன் மனத்தினின்று பிறந்தனன்
சூரியன் கண்களினின் றுதித்தனன்
முகத்தினின் றிந்திரனங்கியும் போந்தனர்
வாயும் பிராணனில் வந்துதித்தனனே.

உந்திரியி லந்தரிக்ஷ மாகியதே
சென்னியினின்றுகாய முண்டாயது
கால்களிற் பூமி காதினிற்றிக்குகள்
இங்ஙன முலகைக் கற்பித்தனனே.

என்றுணர்த்துகின்றன. திருமாலின் ஆயிர நாமஸ்தோத்திரத்தில் சூரியனுஞ் சந்திரனும் அவர்க்கு இரண்டு கண்களென்று கூறப்பட்டுள்ளது. இக்காரணங்களால் இருஷீகேசனென்பது திருமாலுக்கு ஓர் காரணப் பெயராயிற்று.

### தேசிகப் பிரபந்தம் சo-வது நாமப்பாட்டு.

என்னிருடீ கேச னிறைகீ ழிடக்கழுத் தென்றிவற்றில்
நன்னிலை மின்னுரு வாய்நாலு முற்கரங் கொண்டளிக்கும்
சொன்னகில் சேர்ந்தலைக் கும்புனல் வேகை வடகரையில்
தென்ன னுகந்து தொழுந்தேனை வேதியர் தெய்வமொன்றே. [கo]

இதில் கo-வது புண்டரதேவதையின் நிறம் ஆயுதம் முதலியன கூறப்பட்டுள்ளன. மின்னல் நிறம் மூர்த்தியின் நிறம். பதுமகேசரம் மின்னல் இவைகளின் நிறம் கௌரவர்ணத்தின் பேதமாதலால் விஷ்ணு இருஷீகேச

மூர்த்திகளில் நிறங்களின் சேர்க்கையில்லை யென்றுணர்க. ஆயுதம் நான்கு முற்கரம் அதாவது இருப்புலக்கைகள். இடம் கீழ்ப்புறமும் வலது கண்டமும். மந்திரம் சதுர்ப்ப: என்றுதுவக்குவது. வடிவை இவ்வாறு தியானித்துப் பத்தாவது புண்டரத்தை வலது கழுத்தில் தரிப்பது முன்னோர் நெறியென்று காட்டப்பட்டது.

சக-வது நாமம் பத்மநாபன்.

பதுமத்தை நாபியிலுடையவன் பத்மநாபன். நாபி கொப்பூழ். பத்மம் என்பது தாமரை மலரின் பெயர். இதனை நாபியிலுடையவன் பத்மநாபன். இது தற்பவமாய் வந்த மொழி. தமிழில் தற்பவமாய்ப் பதுமநாபனென வழங்குகின்றது. பற்பநாபனென்பது மதுவே. தன் நாபியிலிருந்து மகாத்துமாவாகிய பிரஜாபதியைப் படைத்தானே அவனே காரண வஸ்துவென்றும் அவனை யடைந்தவன் பிறவிப் பிணியிலிருந்து நீங்குகின்றானென்றும் அதர்வணத்தில் கூறப்பட்டுள்ளது. யாமுனாசாரியார் (அவர் செய்த ஆளவந்தார்) தோத்திரத்தில் "கஸ்யோதரே" என்கிற சுலோகத்தில் பிரமன் திருமாலின் நாபீகமலத்தில் தோன்றியது கூறப்பட்டுள்ளது. நம்மாழ்வாரும் திரு ஆசிரியத்தில் "தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த தாமரை யுந்தித்தனிப்பெருநாயக மூவுலகளந்த சேவடியோயே" என்று விளக்கி யிருத்தல் காண்க, கல்விக் களஞ்சியமாகிய கம்பனுமிக் கருத்தை யொட்டி இராமாயணம் பாலகாண்டம் மிதிலைக் காட்சிப் படலத்துச் சந்திரோதயச் சிறப்புக் கூறுமிடத்து

கவி.

வண்டா யயன் நான் மறைபாட லமர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து பாரும் நீரும் பசித்தான்போல்
உண்டா னுந்திக் கடல்பூத்த வோதக் கடலுந் தான்வேறோர்
வெண்டா மரையின் மலர்பூத்த தொத்த தாழி வெண்டிங்கள்.

என்று விளக்கி யிருத்தல் காண்க. இவ்வாறு பதுநாபனென்பது திருமாலின் காரணப் பெயரெனக்கண்டு கொள்க.

தேசிகப் பிரபந்தம் கக-வது நாமப்பாட்டு.

எம்பற்ப நாபனென் னன்பின் மனம்பற்றி மன்னிநின்று
அம்பொற் கதிரவ னுயிர மேவிய மெய்யுருவாய்
அம்பொற் கரங்களி லைம்படை கொண்டஞ்ச லென்றளிக்கும்
செம்பொற் றிருமதிள் சூழ்சிந்து ராசலச் சேவகனே. [கக]

இக்கவியில் கக-வது புண்டர தேவதையின் நிறம் ஆயுதம் முதலியன கூறப்பட்டிருக்கின்றன. ஆயிரஞ் சூரியனுதிக்கும் போதிருக்கும் நிறம்போ

ன்ற நிறமே மூர்த்தியின் நிறம். ஆயுதம் ஐம்படைகளாம். சங்கம், சக்கிரம், கதை, சார்ங்கம் பதுமமென்பவை. இடம் முதுகும் நெஞ்சமும். மந்திரம் பஞ்சாயுத தரமென்று துவக்குவது. இத்தகைய வடிவைத் தியானித்துப் பதினோராவது புண்டரத்தை நடுமுதுகில் இடல் சிட்டாசாரமெனக் கண்டுகொள்க.

## கஉ-வது நாமம் தாமோதரன்.

(க) கயிறு கட்டப்பெற்ற வயிற்றையுடையவனென்பது இதன் பொருள்.

(உ) தாமம் என்பது மாலைக்குப் பெயராதலால் துளபமாலை அசையப் பெற்ற உதரமுடையவன் என்பது மற்றொரு பொருள்.

(ங) தாமம் என்பது உலகத்தை யுணர்த்து மொழியாய்ப் பல உலகங்களைத் தன் உதரத்தி லடக்கிக் கொண்டவனென்பது வேறொரு பொருள்.

"தாமமில்லொழுங்கு கொன்றை தலமொழி நகரந் தாம்பு
பூமணி கோவை மாலை பொருகளங் கரியீராறும்"

என்பது சூளாமணி கக-வது நிகண்டுப்பாட்டின் முதலிரண்டடி. இதில் தாமம் எனுஞ்சொற்கு கஉ-வது பொருள் கூறி யிருத்தல் காண்க.

தாமோதரன் எனும் பெயர் காரணப்பெயராய் வழங்கிய தன் காரணம் கூறுதும். விஷ்ணு புராணம் ஐந்தாம் அம்சம் ஆறும் அத்தியாயத்தில் அது கூறப்பட்டிருக்கின்றது. அதன் ஸாரமாவது:—

ஸ்ரீ கண்ணன் தவழ்ந்து விளையாடும் பருவத்தில் ஓரிடத்தில் தங்காமல் மாட்டுத் தொழுவம் முதலிய பல இடங்களில் ஸஞ்சரிப்பதை யசோதை கண்டு ஒரு கயிற்றைக் கண்ணன் வயிற்றில் சுற்றிக் கட்டி அதை ஒரு உரலில் கட்டிவிட்டுத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தருணத்தில் கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு அங்கிருந்த இரண்டு மருத மரத்தின் நடுவே தவழ்ந்து போனான். உரல் அம்மரங்களின் நடுவில் அகப்பட்டுக்கொண்டதால் யமளார்ச்சுன மென்னும் அவ்விரண்டு மரங்களும் பெருங்கிளைகளோடு கடகடாவென்று முறிந்துவிழுந்தன. கண்ணன் அதைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டிருந்தான். எல்லோரும் சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்துக் களித்தார்கள். இது காரணமாக ஸ்ரீ கிருஷ்ணனுக்குள்ள தாமோதரனெனும் பெயருக்கு இவ்வாறாகவும் ஒரு பொருள் வழங்கி வந்தது.

## தேசிகப் பிரபந்தம் கஉ-வது நாமப்பாட்டு.

தாமோ தரனெனத் தாமங்கள் நாலு கரங்களிற்கொண்
டாமோ தரமென வாகத் தினுட்புறம் பிற்கழுத்தும்
தாமோ ரிளங்கதிரோ னென்ன வென்னு ளிருளறுக்கும்
மாமோக மாற்று மதிளத்தி யூரின் மரகதமே. [கஉ]

இப்பாட்டில் கஉ-வது புண்டர தேவதையின் நிறம் ஆயுதங்கள் முதலியன கூறப்பட்டன. உதிக்குஞ் சூரியன் நிறமே மூர்த்தியின் நிறம். ஆயுதம் நான்குகயிறுகள். இடம் சரீரத்தினுட்புறமும் பின்கழுத்தும்.மந்திரம் "பாசஹஸ்ததாம்" என்று துவக்குவது. இங்கோதியபடி உருவத்தைத் தியானித்து கஉ-வது புண்டரத்தைத் தரித்தல் முறையென்பது முன்னோரின் சிட்டாசாரம்.

### கரு-வது தலைக்கட்டுப்பாட்டு.

கத்தித் திரியுங் கலைகளை வெல்லும் கருத்தில்வைத்து
பத்திக் குறுதுளை பன்னிரு நாமம் பயில்பவர்க்கு
முத்திக்கு மூல மெனவே மொழிந்தவிம் மூன்று நான்கும்
தித்திக்கு மெங்கள் திருவத்தி யூரரைச் சேர்பவர்க்கே. [கரு]

இங்கெடுத்தோதிய இப்பன்னிரண்டு பாடல்களில் கஉ-வது புண்டரதேவதைகளின் நிறம் ஆயுதம் முதலியன நிரூபிக்கப்பட்டன. பத்தியை மேலெழுப்பும் கேசவாதி பன்னிரு நாமங்களை மனதில் பதித்துக் கொண்டு அவைகளின் பொருள்களைத் தியானித் துணர்ந்துகொண்டு தினந்தோறும் அப்பியாசம் பண்ணும் பத்தர்களுக்கு இப்பாடல்கள் திருமாலின் சரணாரவிந்தங்களிற் சேர்ப்பிக்கு மென்பதே இத்தலைக் கட்டுப்பாட்டின் கருத்து.

இப்பாடலில் தித்திக்கு மென்பது சரியான பாடம். முத்திக்கு மூல மென்று கூறப்பெற்றதால் சித்திக்கு மெனும்பாடம் சிறக்காது. மதுரகவியாரும் "தென்குருகூர் நம்பியென்றக்கால் அமுதூறும் என்னாவுக்கே" யென்று நாமோச்சாரணத்தின் சிறப்பை எடுத்தோதிய படியே தித்திக்கு மெனும் பாடமே சித்தித்தல் காண்க.

நாமம் அல்லது நாமதேயம் என்பது வடசொல். "ணமு" எனும் தாதுவுக்குச் சொல்லப்படுதல் என்பது பொருள். இதனால் தனது உபாசனா மூர்த்தியைச் சொல்லப்படுவது நாமமெனப் பொருள்படுகின்றது. அம்மூர்த்தியின் வடிவங்கள் பலவாதலின் அவைகளை மனதில் பதித்துக்கொள்ள நிறம் ஆயுதம் முதலியன கூறப்பட்டன. புருடன் மணிவரமாக வென்று இந்நூலாசிரியர் வேறிடத்துக் கூறி யிருப்பதும் இந்நயங் கருதியதேயாம். இவ்வாறு மூர்த்தியின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு அந்நாமங்களின் இலக்ஷியமான உருவத்தை தியானித்துக்கொண்டு தேகத்தில் கஉ-இடங்களிலும் புண்டரங்களைத் தரிக்கில் அது பத்தர்களைக் காத்து முடிவில் பரம பதத்தையடைவிக்கு மென்பதுவே இப்பிரபந்தத்தின் சாரம். இவ்வாறு செய்யாது அலங்காரமாக மட்டும் இடப்படும் நாமங்கள் கஉ-ம் "புறஞ்சுவர் கோலஞ் செய்து புட்கவ்வக் கிடக்கின்றீரே" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் காட்டிய

படியே திண்ணைகளில் அடிக்கப்படும் பட்டைகள் போன்று வெளிக்கோலமா மத்தனையே மற்றுப்பலனை யளிப்பதொன்றுகாது. இதனைச் சைவவைணவர் கள் நன்குணர்ந்து தினந்தோறும் தங்கள் புண்டரங்களைத் தரித்துக்கொள் ளல்வேண்டுமென்பது ஆன்றோர் வழக்கு. நம்மாழ்வாரும் இதனைத் திருமா லடியார் நன்கு பகுத்துணர்ந்து அனுட்டித்துவர

"நீறு செவ்வேயிடக் காணில் நெடு" "மாலடியாரென்றோடு மென்றும்."

"கரியமேனிமிசை வெளியநீறு" "சிறியதேயிடும்" என்றும் கூறியிருத்தல் காண்க.

நாமமிடுவதில் சிறுமை வடிவத்தில் நேரிடுமாயினுங்கூடும். நாமோச்சார ணம் மந்திரம் தியானங்களிற் சிறுமை கூடாவென்பதைச் சுட்டியே சிறிதே யிடுமென்றும் செவ்வேயிடின் என்றதால் நாமத்தின் வடிவத்தைக் காட்டிலும் உச்சாரண மந்திரத் தியானத்தின் செம்மை கொள்ளுதல் சிறப்பாம்.

இவ்வாறு நாமம் என்பது உபாசன மூர்த்தியின் பெயரையுணர்த்தி அப் பெயரை யுச்சிரித்துக்கொண்டே தியானவகையாலிடப்படும் சுவேத மிருத்தி கை ஸ்ரீ சூர்ண வடிவங்களை யுணர்த்துகின்றன. இது ஸ்ரீ பெரும்பூதூர் இரா மாநுஜர், தூப்புல் ஸ்ரீ வேதாந்ததேசிகர், பிள்ளை லோகாசாரியர், ஸ்ரீ மணவா ளமாமுனிகள் முதலியோரா லனுட்டிக்கப்பட்டு வைஷ்ணவ பக்தர்களால் அவர்கள் நியமனப்படி அநுட்டிக்கப்படுகின்றது. தியானத்திற்குரிய முக்கி யத்தலம் லலாடமாதலால் லடாடமில்லாத நெற்றிநீயதென்று பர்த்ருஹரி யோகிகளும் குறிப்பிட்டுள்ளார். மூன்று புண்டாரங்களுக்குக் குறையாது யாரும் புண்டரர்தரித்தல் கூடாது. அவ்விடங்கள் நெற்றி தலையினுச்சி பிடரி என்பவைகளே.

இங்ஙனம் தூப்புல் பிள்ளை யெனும் நாமத்தாலும் வெங்கடநாதாசாரி யர் எனு நாமத்தாலும் வேதாந்த தேசிகரெனும நாமத்தாலும் விளங்கும் மகான் பக்தர்களின் பொருட்டுத் திருவாக்காலளித்த பன்னிரு நாமப்பாட்டு கள் நிறைவேறியன.

பாகவதர்களின் தாஸன்

தி. வேங்கடராம ஐயங்கார்,

தமிழ்ப் பண்டிதர்.

---

## மதராஸ் லிடரரிபூரோ.

பாரதஸாரம் முதற்பாகம். விலை அணா 10.

பாரதஸாரம் இரண்டாவது பாகம். விலை அணா 10.

தென்னாட்டுச் சிரேட்டர்கள் முதற்பாகம். விலை அணா 12.

# BE DESIROUS TO DO DEEDS OF CHARITY.

## "அறஞ்செய விரும்பு."

ஔவையார் என்னும் அருந்தமிழ்ப் புலவர் பெருமாட்டி இயற்றிய **ஆத்திசூடி** என்னும் சிறு நூலின்கண் **அறஞ்செய விரும்பு** என்னும் வாக்கியத்தைமுதலிற்காணலாம். இச்சிறிய நூலானது நம்முள் சிறியோர் பெரியோர் கற்ருேர் மற்ருேர் ஆகிய அனைவரும் அறிந்ததொன்று. தற்காலத்தில் நம் மிந்துக்களுள் மட்டுமென்று, ஐரோப்பியர் முதலிய அன்னியர்தாமும் இன்னூலின் பெருமையை அறிந்து இதைக் கையாடி வருகின்றனர். இதனுல் இகபரஞானங்கள் இரண்டும் பெறலாம். இந்நூல் முக்கியமாகச் சிறுவர்க்கென்றே இயற்றப்பட்டதாகலின் மிக எளிய சொற்களால் சிறு சிறு வாக்கியங்களால் அமைக்கப்பட்டுள்ளது. அச்சிறுவாக்கியங்களை ஆராயப் புகுந்தால் அவற்றுள் அரிய பெரிய விஷயங்கள் பலபுதைந்து கிடப்பனவற்றைக்காணலாம்.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று ஔவையே திருக்குறளுக்குச் செப்பிய நுண்மையின் நுண்மையை ஆராய்வதற்கு இவ்வாத்தி சூடியே தகுதியுடையது. இந்நூலின் பெருமை இத்தன்மைத்தென, அதன் வாக்கியங்களைத் தனித்தனி எடுத்து நுட்பமாய் ஆராயுங்கால் நன்கு விளங்கும். இவ்வாக்கியங்களெல்லாம் சிறுவர்க்குபதேசமாக "இதைச்செய்" "நீ இதைவிலக்கு" என்றதைப்போல் விதி விலக்கு வாக்கியங்களால் ஏவல் வினையால் முடிந்திருக்கின்றன. இதன் முதல் வாக்கியம் **அறஞ்செயவிரும்பு.** தருமத்தைச் செய்வதற்குயாவரும் ஆசை கொள்ளவேண்டும் என்பது இதன்பொருள்.

இவ்வுலகத்தில் மனிதராய்ப் பிறந்த எல்லாரும் அடைய வேண்டியபுருஷார்த்தங்கள் நான்கு என்பது யாவரும் அறிந்த விஷயமே. அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பனவேயாம். இவ்வுலகில் நாம் எல்லோரும் கர்மவசத்தாலே ஜன்மமெடுத் திருக்கிருேம். முன்கர்மகழிவிற்காக எடுத்த இச்சன்மத்திலே மேலும் கர்மங்கள் தேடிக்கொள்ளாவண்ணம் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நமது செய்கைகளின் பயனையே பின் நாம் அநுபவிக்கின்ருே மாதலால் இப்போது நமக்கும் பிறர்க்கும் நற்கருமங்களாகிய அறங்களைச் செய்யின் பின் தீவினைப் பயன் பெறமாட்டோம். ஆதலால் அறஞ்செய்தல் முதலில் வலியுறுத்தப்பட்டது.

அறஞ்செய்யின் அவ்வறம் இப்போது மற்றவர்கட்கும் பின்னர் நமக்கும் நன்மை விளைக்கும். ஆகவே, குறைந்தது நம்முடைய நன்மைக்காகவேனும் அறஞ்செய்யவேண்டும்.

அறம் நம்சாஸ்திரப்படி இல்லறம் துறவறம் என இரண்டுவகைப்படும். இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச்சொல்லப்படுகிற வழியிலே நின்று அதற்குத்துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவது என்பர் பரிமேலழகரும்.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை"

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை"

என்று கூறியவாங்கு இவர்கள் எல்லார்க்கும் உதவியாய் நின்று ஓம்புதலும் பிராணிகளிடத்து அருள் கொண்டிருத்தலும் இவர்கள் செய்ய வேண்டிய தருமங்களாம். துறவறமாவது இல்லறத்தை நிரப்பி அதன்பின் இவ்வுலக வின்பங்களை யெல்லாம் வெறுத்துவிட்டுக் காட்டிற்குச் சென்று "ஓரறிவுயிர்க்கு முறு துயரோம்பி" மனத்தை ஐம்புலன்களின் வழியே போக்காது ஒருவழி நிறுத்தி ஆன்மரக்ஷணம் தேடிக்கொள்வது. இப்படித் துறவறமானது இல்லறத்தை முற்றி மேற் செய்யப் படுவதென்றே இருந்தும், துறவறம் இல்லறத்திற்கு முற்றும் மாறுவது என்று கூறுவாரும் உளர்.

அஃது பொருந்தாது. இல்லறம் துறவறமாகிய இரண்டிற்கும் முடிவிற்பயனொன்றேயாம். ஆதலின் துறவறம் கைத்தமருந்துண்டு நோயைப் போக்கிக் கொள்ளுதலையும், இல்லறம் இனித்த மருந்துண்டு எளிதில் நோயைப் போக்கிக்கொள்ளுதலையும் ஒக்கும். இவ்வுலகத்தார் எளிதில் கைக்கொண்டு நடத்தக்கூடியது இல்லறமேயாதலின் பொதுவாக அதுவே அவர்கட்கு வாதிக்கப்பட்டது.

இல்லறத்தோர் செய்யவேண்டுவன 32, அறங்கள். பலவேறுகாலங்களில் வெவ்வேறு தேசங்களில் சிற்சில அறங்கள் மற்றவற்றைவிட முக்கியமானவையாகக் கருதப்பட்டுவந்தன. உதாரணமாக நமது இந்தியாதேசத்தில் கோவில்கட்டுதலும் குளம்வெட்டுதலும் சாலைவைப்பதும் (இக்காலத்தில் சோம்பேறி மடங்களாக நாம் சாக்ஷியத்திற் பார்க்கின்றனவும் நாட்டிற்குமிகத் தீங்கு விளைப்பனவுமாகிய) சத்திரங்கட்டுதலும் முதலியன மிக முக்கியமானவையாகக் கருதப்பட்டுவந்தன. வேறு சில தேசங்களிற் கல்வி வளர்த்தலும் இல்லார்க்கு வேலைதந்துதவுதலும் ஆகிய இவைபோன் றவை முக்கியமானவையாகக் கருதிக்கையாளப்பட்டு வந்தன.

இப்போது நம்மிந்தியாவிலும்கூட பல கனதனவான்கள் ஐரோப்பிய வழியைப்பின்பற்றிக் கல்விவளர்த்தலையே பெருந்தர்மமாகக் கொண்டு அள

வற்ற திரவிய முதவிக்கல்வியபிவிர்த்தி செய்துவருகின்றனர். உதாரணம் பலவுள. அவையாவரும் அறிந்தனவே யாகலின் கூறுது விடுத்தாம். ஒருவனுக்கு உதவிசெய்யின் (உதவிபெற்றவனுக்கு) அவற்றின் பயன் இம்மையோடு போய்விடக்கூடிய மற்ற அறங்கள் போலாது எழுமையினும் சென்றீவதாகிய கல்வியுதவுதல் எவ்வளவு பெரிய தருமம் பாருங்கள்! அதைப்பற்றி நாம் விரித்தும் கூறவேண்டுமோ ?

இனி செய என்னும் சொல்லைப்பற்றி ஆராய்ந்தால், அது அறத்தை நாம் செய்ய விரும்புதலே யல்லாமல் பிறரும் அதனையே செய்ய நாம்விரும்ப வேண்டும் என்னும் பொருளைத்தருவதும் புலப்படும். "அறம் அல்லாதனவற்றை நாம் செய்தால்தானே நமக்குப்பாதகம்" என்று எண்ணி பிறரைத் தீக்கருமங்களிற் போதித்து ஏவுகின்றவர்களும், பிறர் அறம் அல்லன செய்தால் அவற்றைப்பார்த்தும் அவர்களும் அறஞ்செய்ய வேண்டுமென்று விரும்பி அவர்களைத்திருத்த முயலாது நமக்கென்ன வென்று சும்மா போகின்றவர்களுமாகிய சிலரை நோக்கி இங்ஙனம் கூறியதாக் கொள்ளலாம்.

இனி **விரும்பு** என்னும் சொல் எவ்வளவு அழகாக் அமைக்கப் பட்டிருக்கிறது பாருங்கள்! நம்சிற்றறிவிற்கு எட்டியமட்டும் இதையோசித்துப் பார்ப்போமானால் முகவுரையிற் கூறிய புகழ்முற்றும் இதற்கு உரித்தானதாகவே தோற்றுகின்றது. முதலில் மனத்தால் ஒன்றை விரும்பினோமானல் அவ்விருப்ப மாத்திரத்திலே அதன்பயன் நம்மை வந்து பற்றுகிறது என்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. மனத்தால் விரும்பிய பாவங்கட்கு எவ்வளவோ தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றியன்றே பெரியோரும் "மற்றை மாதரார் தம்மை என்றன் **மனத்தினும்** தீண்டேன்" என்றனர். அதுபோலவே எதிர்மறை முகத்தால் மனத்தால் விரும்பியநன்மைகட்கும் நற்பயன் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன் மற்றவர்கட்கு நன்மை செய்ய முடியாதாயினும் அவர்கட்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்பின மாத்திரத்திலேயே அவ்வறத்தின் பயனைப் பெறுவான் என்பது நூற்கொள்கை யாகலின் "உன்னல் அறஞ்செய்ய இயலினும் இயலாவிடினும் நீ அறத்தைச் செய்ய விரும்புவாயாக" என்று குறிப்பிக்க **விரும்பு** எனக் கூறினள்.

இனி ஒருவன் அறம் செய்வதற்கு மனத்தில் எப்பொழுதும் விருப்பங் கொண்டவனுகவே யிருந்தால் அவ்விருப்பமானது முற்றி அவன் செய்யுங் காரியங்களை யெல்லாம் நல்லனவாகத் திருத்துமன்றே. அவன் ஏதோ ஒருக்காரணத்தால் ஒருவருக்குத் தீங்குவிளைக்கப்புகுங்காலும் அவனுடைய இயற்கையாகிய முன் நல் விருப்பத்தின் பயனே மேலிட்டு அச்செயலின் தீங்கை அழித்தாவது குறைத்தாவது விடும் என்பதற் கையமில்லை. விருப்பம் இவ்விதத்திலும் பயன்படுதல்பற்றி விரும்பு எனக்குறிப்பிட்டார்.

மேலும் அறஞ்செய்தலை ஒரு கடமையாகவாவது பிறர் புகழுக்கிச்சை வைத்தாவது வசையைவெறுத்தாவது மற்று வேறெவ்வித சுய நன்மையை உத்தேசித்தாவது செய்தல் கூடாது. அவ்வறத்தின் பயன்கருதியே மிக விருப்பத்தோடும் செய்யவேண்டும் என்பதும் குறிப்பிக்க விரும்பு என்றூர்.

ஆகலின் நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற தருமத்தைச் செய்து கடவுள் அருளுக்குப் பாத்திரராய் வாழ்வோமாக.

இதுவரையும் ஏதோ எனது புத்திக்கெட்டிய மட்டில் புலவர் பெருமாட்டியாகிய ஔவையாரின் அருமைத்திருவாக்காகிய அறஞ்செயவிரும்பு' என்னும் வாக்கியத்தை யாவரும் கைக்கொண்டொழுக வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லிவந்தேன். அதில் ஏதேனும் குற்றங் குறைகளிருப்பின் பெரியோர்கள் என்மீது கோபியாமல் இருப்பார்களாக; ஔவையார் அருளிச் செய்த அடுத்தவாக்கியம் ஆறுவதுசினம் ஆகலின்.

M. V. மீனுக்ஷி சுந்தரம்.

---

## கம்பர்.

---

இவர் இந்தியாவிலே காவேரியாற்றின் வளப்பத்தையுடைய சோழநாட்டிலே திருவழுந்தூரிலே நான்காம் வருணத்திலே பிறந்தவர். இவர் தம் தந்தையை இளமைப்பருவத்திலேயே இழக்க நேரிட்டபோதிலும் திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியார் ஆதரணையிலிருந்து வந்தனர்.

'இவர் ஒருநாள்தம் ஆசிரியர் தினைப்புனத்தைக் காக்குமாறு நேரிட்டபொழுது அவ்வூர் அரசன் காளிங்கராயன் என்போனுடைய குதிரை தாம் எவ்வளவு வெருட்டியும் ஓடாமல் அத்தினைப்புனத்தை மேய்ந்ததினுல் வருந்தி யழுதார். அழுதகளைப்பினுல் நித்திரைபோயினுர். சமீபத்தில் கோயில்கொண்ட காளியினுடைய அநுக்கிரஹத்தால் அக்குதிரை இறக்குமாறு ஒருபாடலைப்பாடினுர். குதிரையிறந்த சேதியைக் கேள்வியுற்ற ஆசிரியர்பயங்கொண்டு கம்பரையே அப்பாடலைமாற்றி அக்குதிரை உயிர்த்தெழுமாறுசொல்லக் குதிரையும் எழுந்துசென்றது.

இவ்வாச்சரியமான விஷயங்களைக் கேட்ட குலோத்துங்கசோழன் இதுவரையும தன்சமஸ்தான வித்துவானுகப் பாராட்டி வந்தனன்' என்றதோர் கதைவழங்கும்.

குலோத்துங்கன் வேண்டுகோளால் இவர் இராமாயணம்பாடினர். பாடியகாலத்தில் தன்னைக்காப்பாற்றிய சடையப்பமுதலியாரது பெயரைஐயிரண்டிடத்தில்ஞாபகக்குறியாக அமைத்துப்பாடியிருக்கின்றனர். இதுவே இவரது நன்றியறிவுக்குப் போதியசான்றாம். இராமாயணம் இவ்வுலகத்தில் வழங்கும் காலம்வரையிற் சடையப்ப முதலியாரது பெயரும் விளங்கும் என்பதுநினைத்தே அவர் பெயரையும் அமைத்துப் பாடினர்போலும்.

இவர் குலோத்துங்கசோழன் முதலானவன் காலத்தவர் என்றமையால் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது அறியக்கிடக்கின்றது: குலோத்துங்கசோழன் முதலானவன் கி. பி. 1063 ஆம் ஆண்டு அரசுரிமை எய்தினன். (Vide Indian Antiquary. Paqe 296-299 October 1884.) கம்பர் என்றபேர் மாத்திரையானும் அம்பிகாபதியென்ற அவர் தம்புத்திரர் பெயரானும் இவரைச்சைவர் என்றும், கதாநாயகனிடத்துப் பெரிதும் பக்தியுடமை பாராட்டிப் பரம்பொருளாக வகுத்துக் காட்டலினல் இவரது சமயம் வைணவமென்றும் அவரவர் கூறுவராயினும்,

"வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டா
ரூழ்கொண்ட சமயத் தன்னா னுருவுகண் டாரை யொத்தார்."

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்த
மெல்லையின் மறைக ளாலு மியம்பிடும் பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமஞ் சொல்லும் பொருளும் போற் பரந்த தன்றே"

என்றற் றொடக்கத்த பாடல்களான் இவர் அத்துவிதக்கொள்கை யுடையவர் என்பது தெளியக்கிடைக்கின்றது. அறிவுடைய மாந்தர் அனைவரும் இக்கொள்கையை யன்றே சிறந்ததெனப் பாராட்டுவார்! மேலும் சாதி வேற்றுமையாற் கூறும் மொழிகளை,

"அரனதிக னுலகளந்த வரியதிகென் றுரைக்கு மறிவி லார்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற் புகலரிய பண்பிற் றுமால்"

என்று ஒருவாற்றான் நகையாடுகின்றனர்.

மனத்தில் அநுதாபத்தையும் இன்பத்தையும் விளைப்பதே பாடலென்று கூறலாகும். இத்தகைய செய்யுள் விளக்கத்திற்கு இராமாயணம் ஓர்சிறந்த காட்டாகும். இவர்தம்செய்யுளின் நடை விழுமியது. விழுமிய நடையென்பதென்னையோவெனின் ஓசையும் கருத்தும் வாசிப்போர் மனத்தையுருக்குந் தன்மைனவாயிருந்து காப்பியவின்பத்தை விளைப்பதேயாம். கம்பர் சொல்வழக்கு அவ்வளவு சிறப்புடைத்தன்று; சமயத்துக்கேற்ற மொழிகளைத்தாமேயுண்டாக்கி ஆன்றோராட்சியை சிற்சில விடங்களிற் கடந்து தம்

செய்யுட்களில் வழங்குகின்றனர். வடநூன்முடிபுகளையுடைய வாக்கியங்களைப்பெரிதுங் கையாடுகின்றனர்; இதனாலேயே இது தாம்மொழிபெயர்த்த நூல் என்பதை மிகவும் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர்.

பற்பலவிடங்களில் திருக்குறள், கலித்தொகை, புறநானூறு, நாலடியார், சிந்தாமணி முதலிய மாபெருஞ் செய்யுட்களில் தாம் பயின்றவர் என்பதை வெளியிடுகின்றனர்.

உவமான உவமேய முகத்தால் தாம்கருதிய பொருளைக்குறிப்பாய்க் கூறுகின்றனர். மேலும் உவமானத்தில் சிலமுக்கிய பாகங்களைமட்டும் உணர்த்தி மற்றையவற்றை நம் எண்ணத்தால் முற்றுவித்துக் கொள்ளுமாறு விடுவிக்கின்றனர். தொனிப்பொருளும் இவர் பாடல்களிற் பெரிதுங்காணலாகும். சொற்செறிவு பொருட்செறிவு இவைகட்கு இருப்பிடம் இந்நூல். இந்நூலாசிரியர் தாம் நகைமொழிவிலை(Hu-mourous Writer.)வல்ல நற்றமிழ்ப்பாவலர் என்பதை பலவிடங்களிற் காட்டுகின்றனர். முக்கியமாய் இதனை உலாவியற்படலத்திலும், சூர்ப்பநகைப்படலத்திலும் அறியலாகும். கதைநிகழ்ச்சியின்கண் ஆங்காங்கு தற்கூற்றாகக் கூறுவனவெல்லாம் மிக்க சமற்காரமாகவும், சமயத்துக்குப் பெரிதும் எற்றனவாகவு மிருக்கின்றன. உதாரணமாக மந்தரையின் மாற்றங்களால் மனந்திருந்த கைகேசியின் தீக்குணத்தை மறைக்கப்புகுந்த புலவர்பிரான்,

“ அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமா
னிரக்க மின்மையன் றோவன்றிவ் வுலகுக்கு ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே.”

என்கின்றார்,

நம்மவராற் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் இராமாயணமும் பாரதமுமே. அத்தகைய நூல்களுட் பெரிதும் நல்லொழுக்கத்தைப் போதிக்கும் இராமயணத்தை மொழிபெயர்த்தகம்பர் யாவராலும் புகழப்படுதல் நேரிதே. சாதிவேற்றுமையினால் உண்டாகும் பொறாமை சிறிதும் இந்நூலினிடத்துப் பாராட்டாது சைவரும் வைணவரும் ஒருங்கு கொண்டாடுதல் நூலின் மேன்மையைச் செவ்வனே தெரிவிக்கின்றது. வடமொழியில் வான்மீகிமுனிவர் எழுதிய ஸ்ரீமத் ராமாயணத்திற்கும் இம்மொழி பெயர்ப்பிற்கும் வேறுபாடுகளிருக்கின்றன. இவ்வேறுபாடு வாமனம், போதாயனம் முதலிய நூல்களை ஆசிரியர் ஆராய்ந்து எழுதியதனால் நிகழ்ந்தனபோலும்.

A. S. பிள்ளை.

# சூளாமணி நாடகம்.

---

## அங்கம்—1.

## களம்—2.

காலம்—பகல்.

இடம்—சக்ரவாளகிரி.

(அரயன் மகட்குரிய மணமகனை யறிய கடவுளைக் கேட்டல்.)

சுவலனசடி:— (தனக்குள்) } "காமர்பூங் கொம்புங் கடந்தா ளித்தலம்
நாமிவ ணடைந்தது வவள்நா யகனெவ
னெனக்கேட் டற்கெ யாதலா லிப்பெருந்
தகையாங் கடவுளுந் தயையைக் கொண்டவ
ரென்கிளத் துவரோ" என்றவ ரடிதொழு
தாண்டகா யருகக் கடவுளெற் கருளே
கண்ணகல் ஞாலங் காத்திடுங் கதிரே!
அடியர்த மருளே ஆருயிர்த் துணையே!
கொடியரை வாட்டுங் கொற்றவ வருகனே!
ஆழ்கட லெழுந்த வம்புலி நிகர்த்த
முகத்தினுட் சுயம்பிரபை மூதறி வுளாட்கு
வருங்கொழு நனைநீர் வழுத்திடல் வேண்டும்;
தானுவே தனிச்செங் கோலுடை யாய்தரு
வரத்தினய் வள்ளால் வரந்தரு வோயே!
இயாவுந் தானு யியங்கிடும் பொருளே
கண்மணிக் குரிய காளையைக் கணத்து
ளேந்தால் சொற்றுதி இறைவா சொற்றுதி
வண்ணு சொற்றுதி வாகாய் சொற்றுதி
கொம்பனுர்க் குரிய கொழுநனைக் கிளத்த
சக்கர வாளத் தடங்கிரி மேவிய
திகம்பரா திருமறு மார்பனே தீர்த்தா!
நக்கனே நான்முக நாயக புத்தா!
புனிதா பூமிசை நடந்தோய் புண்ணிய!
அசோக வதிசய வந்தணு வறிவா!

அரியணைச் செல்வ வருள்தரு மண்ணல் !
அறவோ யறிவா மத்தனே யுறவ !
உறுவார் கமல வூர்தியே கருத்தா !
கலைவல கந்த காதிவென் றோனே !
குற்றங் கடிந்தவ கொல்லா வேந்தனே !
சதுமுக சம்பு சாதுவே சாந்தா !
சித்தனே சமியே சிவகதிக் கிறைவ !
சினவர் சினனே சினேந்த்ரசி மானே !
செய்யோய் செல்வனே சைனவோ தத்வ !
தரும ராசனே தாபதி ரின்றயே !
நிச்சித நிராயுத நீதியோய் புலவ !
போதனே மாலே புண்ணிய முக்குடைச் !
செல்வனே முத்த செம்மலே வரத !
விறலார் வேண்டிடு விஜயகோ விமலா !
சுயம்புவே யெனது சுயம்ப்ரபை மகளை !
வேட்போன் யாவனே விளம்புதி யைய !!

**அருகக்கடவுள்:**—(பேரொளி காட்டிப் பெரிதும் பிரஸந்நராய்)
"சுவல்ன சடியே சுயம்பிரபை நின்மகட்
குரியநற் கணவ னெப்பிலாச் செல்வ
னுள்ளா னவனையு னுழையர்பாற் கேட்டுத்
தெளிகுதி யுரைப்பர் செல்லுதி யாண்டே,
இயான்முனவ் வள்ளலை யியம்புதற் கொண்ணு
தாயினு மாண்பா னமைகுவ னப்ப !
வாகைச் சங்கலார் வணங்குந் தாளுடைக்
குரிசிலே யாவன் கோநக ரெய்திநீ
அமைச்சர்பாற் சொற்று வாராய் குதிபோ"
எனக்கிளத் தினரா யேந்தல் கரத்தலும்

**சுவலனசடி:**—ஓ! ஓ கடவு ளுரைத்தில ராகி
"அமாத்யர்பா லதனை யாராய் குதி"யென
இயம்பி யேகின ரினியெ னிழைப்பது ?
நாட்டைப் புக்கு நவின்றுள வண்ணம்
அன்னவர் சொற்கொடு வாராய் குதுமால்;
அங்ஙன மின்றி யெங்ஙன மாயினும்
அம்மகட் கியைந்த வாளனை யாக்கா
தருபியை யமைப்பினு மடைவே கொண்டுதம்
விதியை வெறுத்து வேணவா கலுழ்ந்து
மனத்துளே நொந்து மாய்வளா லன்னுள்

தனக்கா யவனைச் சரிப்படா னென்னக்
கிளத்துவள் கொல்லோ கிளருமா மணியை
நல் லர தனக்கல னுப்பண் குயிற்று
தீனவங் கத்தி னிடைபதித் திடினு
மன்னது வொண்ணு தெனவறைந் திடுமோ?
உரையா டாது வொளிருமால்; பதிப்போர்
அதனுக் கியைய வாக்குத னேமிதாம்.
அங்ஙன மாயினு மத்தனுந் தம்மகட்
கேற்ற செம்மலை யில்லவ னுகக்
கடிமண மியற்று வித்தல் அவர்கடன்;
அதனு லவர்குடும் பஞ்சிறப் புடையும்.
ஆயதா லறைந்துள வறநெறி வழாத
"அந்தண ரொழுக்கமு மரசர் வாழ்க்கையும்
மந்திர மில்லையேன் மலரும் மாண்பில"
என்றிருத் தவினு வியாமுநம் மமைச்சர்
தம்மோ டாய்த றகைமையென் றோர்ந்து
அவ்வரை நீத்து வணிநகர் புக்கு
உறைந்தனன். பின்ன ருற்றதை யுரைப்பாம்.

V. K. அரங்காசாரியர்.

---

# POORNA CHANDRIKA.

# பூர்ண சந்திரிகா.

---

## 1-வது அத்தியாயம்.

### இமயமலைச் சாரல்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

இரவு 3-மணியிருக்கும் இமயமலைச் சரிவிற் பெரும் புயலடிக்கின்றது. வரிமின்னலும், சுருள் மின்னலும், பாம்பு மின்னலும் இடையிடையே கண்ணைப்பறிக்கும் வெளிச்ச முண்டாக்குகின்றன. மற்றபடி எங்கே பார்த்தாலும் இருள் நெருங்கி வாளால் வெட்டலாம்போலிருக்கின்றது. இடிமுழக்கம் பிறவிச் செவிடனைக் கூட நடுங்கும்படி செய்யும். மின்னலும் இடியாலும் வானங்கிழிந்துபோய் மேலிருந்து பெருவெள்ள மொழுகுவதுபோல் மழைபொழிகின்றது. இக்காலத்தில் கேதாரம் பதரீ க்ஷேத்தி

ரங்களிலிருந்து சிம்லாவுக்குப் போகும் மார்க்கத்தில் இமயமலைக் குகையொன்றில் இரண்டு பிரயாணிகளிருக்கின்றனர். வெளியிலிருந்து வரும் மின்னொளிதவிர உள்ளே வேறு வெளிச்சம் கிடையாது. குளிரோ சகிக்க முடியவில்லை. இரண்டு பிரயாணிகளும் சீதம் பொறுக்கமாட்டாமல் மெய்ந் நடுங்குகிறார்கள். இப்பிரயாணிகளிருவருள் ஒருவர் வயது சென்ற கிழவர், மற்றொருவன் 24 அல்லது 25 வயது கொண்ட இளைஞன். அந்தக் கிழவர் நமது இந்து தேசத்தைச் சேர்ந்தவரல்ல, இதற்கு வடக்கே இமயமலைக் கப்பாலிருக்கும் திபெத்து நாட்டைச் சேர்ந்தவர்.

நமது தமிழ் நாட்டில் பெரிய பண்டார மகாசந்நிதியும் இவருக்குக் கீழ்ப் பல மடங்களில் தம்பிரான்களும் குட்டித்தம்பிரான்களு மிருப்பது போல திபெத்து நாட்டிலுமுண்டு; ஆனால் இங்கே எத்தனையோ ஆதீனங்களும் ஒவ்வொரு ஆதீனத்திற்கும் ஒவ்வொரு பண்டார சந்நிதியும் இருப்பது காண்கிறோம். அங்கே யப்படியல்ல.

திபெத்து நாடு முழுமைக்கும் மேலானலோக குரு லாசாநகரத்திலிருப்பவர். சீனு தேசத்திற்கு திபெத்து நாடு பெயர்மட்டில் கீழ்ப்பட்டதா யிருந்தாலும் ராஜாங்க அதிகாரமெல்லாம் லாசா நகரத்திலிருக்கும் டாலே லாமாவைச் சேர்ந்தது. இந்தடாலே லாமாவின் கீழ்ப் பலவூர்களிலு மிருக்கும் பலமடங்களுக்கும் தனித்தனி லாமாக்களுண்டு. திபேத்துநாட்டார் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு டாலே லாமாவின் கீழுள்ள பலதம்பிரான்களி லொருவர்தான் இப்போது இமயகிரிக்குகையில் குளிரில் ஆடிக் கொண்டிருப்பவர். இந்தலாமாவை வாலிபன் தனது மடிமீது படுக்கவைத்துத் தனது துணிகளாலும் கைகளாலும் அவர்மீது குளிர்படாதபடி மூடிக் கொண்டு தாய் குழந்தையைப் பராமரிப்பது போலப் பார்த்து வருகிறான்.

லாமா சொல்லுகிறார்:—"சந்திரா! 'குலூ' மாளிகையிலிருந்தே உன்னை நான் என்னிடமிருந்து பிரிந்து விடும்படி சொன்னேன், நீ கேதாரக்ஷேத்திரம்பார்க்க வேண்டுமென்றும் அதுவரை என்னுடன் வருவதாகவும் கூறினை. அங்கிருந்து உன்னைத் தெற்கேபோய் விடென்று சொல்லிப்பார்த்தேன். அதன்பிறகு சிம்லாவைப் பார்க்க வேண்டு மென்று ஏதோ காரணம் சொல்லி என்னுடன் வருகிறாய். இந்தக் கிழ உடலை நீ என் இத்தனைபக்ஷத்துடன்கவனிக்க வேண்டும்? இவ்வுடல் நாளைப் பொழுது விடியுமுன் அழிந்து விடப் போகிறது. நீ மாத்திரமிருந்து இந்த சீதளப் பிரதேசங்களில் தனியே கஷ்டப் படப்போகிறாய். நாம் கருதிவந்த ஷாமலே கிராமம் இங்கிருந்து 2-மைலிருக்கும். நான் இறப்பதற்கு முன்பாக அங்கேபோய் விடவேண்டு மென்று நினைத்தேன். இந்தப் புயலால் எனது எண்ணம் தடைப்பட்டு விட்டது.

"ஷாமலே கிராமத்து வேடர்களிலொருவன் [படிப்பொன்றும் இல்லாது போயினும் சற்று மார்க்கஞான முள்ளவன். ஆனால் உலகசக்கரத்தில் அகப்பட்டு மயங்குகிறான்; நான் மரணமடைவதற்கு முன் அவனைப்பார்த்து அவனுக்கு உபதேசஞ் செய்யவேண்டு மென்று எண்ணினேன். ஆனால் இனிமேலொன்றும் முடியாது. இவ்வுடல் பொழுது விடியுமுன் அழிந்துபோய்விடும். அந்த வேடனிடம் நான் ஏன் பற்று வைக்கவேண்டும்? ஐயோ! இந்த மனம்இன்னும் உலக ஆசையிலிருந்து நீங்கவில்லையே."

"ஓம் மணிபத்மே ஹூம் ஓம் மணி பத்மே ஹூம்" குரு ஜபிக்கத் தொடங்கி விட்டார். "ஓம் மணிபத்மே ஹூம்" என்பது தான் அவர்களுடைய மகா மந்திரம்; இதை ஜபித்தால் எல்லா ஞான சித்தியு முண்டாய் விடுமென்பது அவர்களுடைய கொள்கை. திபெத்தில் அநேகர் ஓர் உருளையில் இந்த மந்திரத்தை ஆயிரம் முறை எழுதிவைத்து ஓயாமல் கையால் சுற்றிக்கொண்டிருப்பார்கள். ஒருமுறை சுற்றினால் 100 ஜபம் செய்து விட்டதாக அர்த்தம்.

சந்திரன் லாமாவை நோக்கி "லாமாஜீ! நீங்கள் மனம் கலங்க வேண்டாம். இந்தக்குளிரினால் தான் தங்கள் சரீரம் கொஞ்சம் கஷ்டமடைகிறதேயன்றி வேறில்லை. நாளைக்காலை புயல் நின்றவுடன் தங்களுக்கு சரீரதிடம் உண்டாய்விடும். இல்லா விட்டாலும் நான் ஷாமலே கிராமத்துக்குத் தங்களைத் சுமந்துகொண்டுபோகிறேன்; அங்கேபோய் 2-தினம் இருந்தால் சரியாய்விடும்." என்றான்.

லாமா—"சந்திரா! நீ தெரியாது சொல்கிறாய். திபெத்து நாட்டில் பிறந்து வளர்ந்த இந்த சரீரத்துக்கு இந்தக்குளிர் பெரிய காரியமா? காசிகயைப் பிரதேசங்களின் உஷ்ணந் தான் பொறுக்க முடியாதே யல்லது இமயமலைக்குளிர் இவ்வுடலுக்குச் சுகம் கொடுப்பதல்லவா இயற்கையாகும். இமயமலைக் குளிர் வேண்டுமென்றே நானிங்கு வந்தவனாயிற்றே. சந்திரா! நான் பொழுது விடியுமுன் இறந்துதான் போகப் போகிறேன். ஆனால் இந்து மார்க்கத்திருக்கும் உனக்குத் தரும மார்க் கோபதேசம் (புத்தமார்க்க உபதேசம்) செய்து விட்டுப் போகலாமென்னும் ஓர் ஆசை யுண்டு.

"நீ சமீபத்திலிருந்தால் உன்னைப்பார்க்கும்போதெல்லாம் அந்த ஆசை யுண்டாய் என்னை உலகசக்ரத்துடன் பந்தப் படுத்துகிறது. சந்திரா! ஓம் மணி பத்மே ஹூம் ஓம்."

சிறிது நேரம் கழிந்தது. லாமாஜி எழுந்து உட்கார்ந்து கொண்டுவிட்டார். சந்திரன்பின்னிருந்து இரண்டு கையாலும் தழுவிக்கொண்டிருக்கிறான்.

"சந்திரா! என்பொருட்டாக உறக்க மில்லாமல் விழித்துக்கொண்டிருக்கிறாயே, கொஞ்சம் படுத்து உற-ங்-ங்-ங்."

இதுவரை நடுக்கத்துடனேயே பேசிக் கொண்டிருந்த லாமா இப்போது சந்திரன் கைகளுக் கிடையில் ஆவேசம் வந்தவர்போல் ஆடத் தொடங்கி விட்டார்.

சந்திரன் யோசனை செய்தான் லாமாவின் கஷ்டம் அவனால் சகிக்க முடிய வில்லை. திடீரென்று அவனுக்கோர் யுக்தி தோன்றியது. தனது மேலே போட்டுக்கொண்டிருந்த ரோமத்தாற் செய்த "கோட்" டைக்கழற்றி வைத்துவிட்டு அதற்குள்ளே போட்டிருந்த உடுப்புக்களையு மெடுத்து மறுபடியு மந்த ரோமக் கோட்டை மட்டும் போட்டுக்கொண்டு மற்ற இரண்டு உடுப்புகளுக்கும் நெருப்புப் பெட்டியிலிருந்து ஒரு குச்சி யெடுத்துக் கீறிக் கொளுத்தினான்.

குருவின் " ஆட்டம் " கொஞ்சம் நின்றது.

இமயமலை யருகில் துணியைக் கொடுப்ப தென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? உயிரையே கொடுப்ப தென்றர்த்தம்.

" சந்திரா ! (குருசொல்லுகிறார்) " உனக் கென்னகருணையடா ! ஸ்ரீபுத்த நாதர் உபதேசித்தருளிய ஜீவகாருணியம் கேவலம் ஹிந்துவாகிய உன்னிடம் எவ்வளவு நிறைந்திருக்கிறது ! பவுத்தர்களி லநேகர் இப்படி யிருக்க மாட்டார்களே.

"உனக்கு நாதர் அனுக்கிரகம் கிடைப்பதாக, உன்னிடம் அன்புவைத்து என்னை உலக சக்ரத்தில் பந்தப் படுத்திக்கொண்ட பாவம் என்னை விட்டு நீங்குவதாக. ஓம் மணிபத்மே ஹூம் ஓம். ............... "

லாமாவுக்குச்சந்திரன் மீது அளவுகடந்தஅன்பிருக்கின்றது. ஆனால் உலகத்தில் எந்தவஸ்துவின் மீதும் ஆசையாவது பகையாவது இல்லாதவர்கள் தான் நிர்வாண (மோக்ஷ) பதவியடைவார்க ளென்பதுபவுத்தமார்க்கத்தின் கொள்கை. அதற்கேற்பவே லாமா தமது மடத்தையும் கவுரவத்தையும் செல்வத்தையும் விட்டுவிட்டு ஹிந்துதேசத்திற்கு யாத்திரை செய்து புத்த கயை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து இங்கேயே இறந்து விடலாமென்ற எண்ணங்கொண்டு வந்தவர் இப்போது உடலில் மிக்க துர்ப்பல முண்டானபிறகு காசி கயை முதலியன உஷ்ணபூமியாக இருப்பதால் சிம்லாவுக் கருகில் "ஷாமலே" என்ற கிராமத்திலிருந்து புத்தகயைக்கு வந்திருந்து இவருக்குப் பழக்கமாகிய வேடனொருவன் இருப்பதால் அவ்வூரில் சென்றிருந்து சந்திரன் மேலிருந்த ஆசையை ஒழித்தபிறகு இறக்காலாமென்று தீர்மானித்து வடக்கே புறப்பட்டவர் இடையே "குலூ" மலையரசன் மாளிகைப் பக்கமாக வந்தபோது அந்தச் சிற்றரசன் ஓர் புத்தனுகையால் லாமாவுக்குப் பேருபசாரம்புரிந்து அவ்விடமே இருக்கும்படி வேண்டிக்கொண்டான். லாமா சம்மதியாமல் அங்கிருந்து புறப்பட்டு

"ஷாமலே" கிராமத்தருகில் வரும்போது மாலையிலேயே புயலுக்கஞ்சி இக்குகையில் இருவரும் தங்கினர். வரும் வழியில் ஒவ்வோரிடத்திலும் சந்திரனைத் திரும்பிவிடும்படி கூறினர். குரு மதவைராக்கியத்தால் இங்ஙனம் கூறினும் தன்மீது அவர்யதார்த்த அன்புடையவ ரென்றும், அன்றியும் தானில்லா விட்டால் ஒரு கணமும் அவரால் பிழைத்திருக்க முடியாதென்றும் நன்குணர்ந்த சந்திரன் அவரைப் பலவந்தமாகப் பின் தொடர்ந்து வந்தான்.

சந்திரன் உடுப்பைக் கொளுத்தியதனுல் உண்டாகிய நெருப்புச் சிறிது நேரம் கழித்து அமர்ந்துவிட்டது.

மறுபடி கொஞ்ச காலத்திற் பின் லாமாவுக்கு உடலாட்டம் வெகு பிரமாதமாகி விட்டது. நடுவிலே சற்று நேரம் உஷ்ணமிருந்து பிறகு தணிந்து விட்டது மிகவும் கெடுதியாயிற்று; துன்பமே யனுபவித்து வருவது கஷ்டந்தான். ஆனுலும் இடையே சிறிது இன்பம் கண்ட பிறகு பழைய துன்பத்தை மீளவும் அனுபவிப்பது மகா கஷ்டமல்லவா?

லாமாவுக்குப் பற்கிட்டி விட்டது. சந்திரன் இம்முறை தனது சிறிய புத்தகச் சுமையை எரிக்க நினைத்தான். பிறகு "என்னகஷ்டம் நமக்குண்டாயிற்று; இப்புத்தகங்களை யெரிக்கலாமா? நோயாலும், பசியாலும், மனத்துயராலும் வருந்தியபோதெல்லாம் உற்றதுணையாக இருந்தவைஇப்புத்தகங்களல்லவா?" என்று எண்ணித் தனது குடை, கைத்தடி இரண்டையும் எரித்து விட்டான். குரு சிறிது குணமடைந்தவர் சந்திரனை வாழ்த்தினுர். மறுபடியும் வழக்கம் போலவே உலகசக்ரத்தையும், ஆசை முதலியவற்றையும் தூஷித்து விட்டு மகாமந்திரம் ஜபித்துக்கொண்டிருந்தார்.

பொழுது விடிந்தது புயல் நின்றுவிட்டது. இருண்டமேகங்களாலும் பயங்கரமான மின்னல்களாலும் நிறைந்திருந்த வானகம் இப்போது நிர்மலமாக இருக்கின்றது. அஞ்ஞானம் பொதிந்திருந்த இதயத்தில் அது போய் ஞானம்வந்து கொலுவிருந்தாற் போலச் சூரியன் ஒளி வீசுகின்ருன்.

நமது சந்திரனே குகையினின்றும் வெளியேறித் தன்னைச் சுற்றியெல்லாத்திசையிலும் ஒன்றின்மேலொன்ருக ஓங்கிவளர்ந்திருக்கும் குன்றுகளை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

எங்கே பார்த்தாலும் பச்சைவனங்களினழகும், அவ்வன நெருக்கம் உயர ஏற வேறக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டுவந்து கடைசியாக ஒரே உயரத்தில் வரிகீறினுற்போல மரமே யில்லாதுபோய், அதற்கப்பால் எத்தனையோ கற்பகாலமாகப் பனி மூடிக்கிடக்குஞ் சிகரங்களிற் சூரியவொளி தாக்கும் அற்புதமும் காணக்காண நமது சந்திரன் மனத்தை விசாலப் படுத்தின.

சந்திரன் சொல்லுகிறான்:— "அடடா! என்ன ஆச்சரியம்! ஈசுர சிருஷ்டி எத்தனை அழகாயிருக்கின்றது! தனிமையாகிய இந்த இடத்தின் பரிசுத்தத்தையும் பெருமையையும் காசி, கயை, லக்னவ் முதலியவற்றைப் போன்ற ஏதாவது ஒரு நகரத்தின் ஜனக் கூட்ட முள்ள, புழுதிபடிந்த துர் நாற்றமிக்க தெருக்களின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கடவுளின் அதிசுந்தரமான இந்த உலகத்தை மனிதர்கள் குடியேறி ஆபாசமாக்குகிறார்களென்றே சொல்லவேண்டும். ஆகா! மனதில் என்ன சாந்த முண்டாகிறது. மலைச்சாரல்களிலே வசித்துக்கொண்டிருந்த முனிவர்கள் உலக சுகத்தை யெல்லாம் வெறுத்தவர்களென்று எண்ணியிருந்தேன். இப்போது தான் வானுறவோங்கிய மாளிகைகளில் வசிக்கும் அரசர்களைவிட இவ்வித வனமொன்றில் வசிக்கும் முனிவன் உலகவின்பத்தை அதிகமாக அனுபவிக்கக் கூடியவனென்று அறிந்து கொண்டேன்.

"இந்தக்காலைக் காற்றில் கொஞ்சதூரம் நடந்தால் சரீரத்துக்கு மிக்க நன்மையுண்டாகுமென்று நினைக்கிறேன். ஷாமலேகிராமத்துக்குச் சரியான வழியெது என்பதையும் பார்த்து வரவேண்டும். லாமாவிடம்போய் அனுமதி பெற்றுக் கொண்டு பிறகு சிறிது சுற்றிவரலாம்" என்று யோசனை செய்து கொண்டு சந்திரன் குகைக்குள்ளே சென்று,

லாமாவிடம் "நான்போய் ஷாமலே கிராமத்தின் வழியை நிச்சயப் படுத்தி வருகிறேன்; தாங்கள் நான் வரும் வரை இங்கேயே யிருங்கள்" என்றான்.

"மகனே! இன்னும் 2 மைலுக்கு மேலிருக்கமாட்டாது. எனக்கு வழி நன்றாய்த் தெரியும். ஆனால் இப்போது ஒருக்கால் தடுமாறிப் போகலாம்; எதற்கும் நீபோய் ஒருமுறை பார்த்து விட்டு வா" என்றனர் லாமா.

இளைஞன் வெளியேறிச் சிறிதுதூரம் போகுமுன் "சந்திரா! சந்திரா!" என்று கூப்பிட்டார்.

"என்ன லாமாஜி?" என்று கேட்டுத்திரும்புங்காலத்திலேயே அவர் "ஒன்றுமில்லை நீ போ" என்று விட்டார்.

குகையின் ஓர் ஓரத்தில் ஒரு பொந்தினின்று ஓர் கரும்பாம்பு தலையை நீட்டி உள்ளே மறுபடி கொண்டுபோய் விட்டது. இதைப் பார்த்தவுடன் திகிலினால் இளைஞனை யழைத்தவர் ஒருவேளை சந்திரனிடம் அறிவித்தால் அந்தப்பாம்பை கொன்று விடுவானென்று எண்ணி அவனைத்திரும்பப் போய்விடும்படி சொன்னார். "ஐயோ! அந்த ஜீவன் (பாம்பு) இன்னும் உலக சக்ரத்திலிருந்து நீங்குவதற்கு எத்தனை ஜன்மமெடுக்கவேண்டுமோ தெரியாது! இந்த ஜன்மத்தின் பாதியில் கொன்று விட்டால் அது மறு

படியும் பாம்பாகப் பிறந்துவிடும். அந்த பந்த நிவாரணம் மிகவும் தாமசப்படும். அதனை என் கொல்லவேண்டும்?'' என்று தனக்குள்ளே முணு முணுத்துக் கொண்டிருந்தார்.

சந்திரனோ இதையறியான்; தன்னைப்பிரிந்து அரைக்கணமேனுமிருக்க மனமில்லாமையால் கூப்பிடுகிறாரென்று சிந்தித்துக்கொண்டு போயினன். லாமாவுக்குத்தன்மீதுள்ள அன்பை அவன் நன்றாக உணர்வான். அவனுக்கோ லாமாவிடம் நிறைந்த விசுவாசமுண்டு.

சந்திரனோ ஹிந்து சன்யாசி; இவன்லாமாவுடனிருப்பதற்கு என்னகாரணமென்று எவரும் சந்தேகிக்கக் கூடும்.

இரண்டு வருஷங்களுக்கு முன் சந்திரன் ஒரு முறை கயையிலிருந்து காசிக்கு ரயிலேறி வந்தான்; இவன் ஏறியிருந்த வண்டியில் நமது லாமாவுமிருந்தனர்.

இந்து தேசத்தில் பலவிடம் சுற்றிப்பார்த்தவனா யிருந்தும் சந்திரன் அதுகாறும் திபெத்து லாமாக்களி லெவரையும் கண்டறிந்த தில்லை. குதிரையின்மேலே போடும் துணிபோல மங்கல் நிறமுடைதாய் மடிப்பு மடிப்பா யிருக்கும் உடையும், இடுப்பில் தொங்கவிட்டிருக்கும் ஜபமாலையும், தலையில் வெகு விநோதமான பாகையும், அரைத்த மஞ்சள் போன்ற முழுத்தமுகமு முடையவரான இந்தக்கிழவரைப்பார்த்தவுடன் இவர் இன்னாரென்று தெரிய வேண்டு மென்ற எண்ணம் சந்திரனுக் குண்டாயிற்று. "பாவாஜி! தாங்களிருப்பதெவ்விடம்?'' என்று கேட்டான். அதன்பிறகு அவர் திபெத்து நாட்டுக் குருவென்பதையும் பெரும்பதவியையும் செல்வத்தையும் வெறுத்து வந்திருக்கிறா ரென்பதையும் தெறிந்து கொண்டான்.

"லாமாஜி! மிகவும் களைத்திருக்கின்றீர்களே ஏதாவது ஆகாரம் செய்கிறீர்களா?'' என்று கேட்டான், குருதலையை அசைத்தார். தன்னிட மிருந்த பலகாரம் சிறிதையும் சில கனிகளையு மெடுத்துக் கொடுத்தான். லாமா அவைகளை உண்டபிறகு "அப்பா! நான் திபெத்திலிருந்து வரும்போது என்னுடன் ஓர் சீடனையழைத்துவந்தேன். அவன் வரும் வழியில் மலைக்காய்ச்சலாலிறந்து போய்விட்டான். அவன்தான் இந்த சரீரத்துக்கு பிக்ஷையெடுத்து உணவு கொண்டு தருபவன் நல்லவனாகையால் சீக்கிர மிறந்துபோய்விட்டான். இந்தக் கிழவுடலும் எத்தனையோ நாளாக இருக்கிறது. இன்னும் அழியவில்லை; நல்லோர்கள் சீக்கிரம் இறந்துபோகின்றனர். ஸ்ரீ புத்தநாதர் அதி பால்யத்தில் சரீரத்தைவிட்டு நீங்கி விட்டாரல்லவா? ஓம் மணிபத்மே ஹூம் ஓம் ... ... ..."

சந்திரன் "லாமாஜீ, நான் வீணாகத்தான் திரிந்துகொண்டிருக்கிறேன்; நான் தங்களுக்குச் சீடனாக இருக்கின்றேன்; பிக்ஷையெடுத்துக் கொண்டு வருகிறேன். மற்றும் தங்களுக்கு வேண்டிய கைங்கரியங்களெல்லாவற்றையும் செய்கிறே'' னென்று கூறினன்.

லாமாஜி, "அப்பா! நீ மிகவும் இளைஞனாக இருக்கிறாய்; உனதுவேஷத்தைப் பார்த்தால் இந்தநாட்டு அஞ்ஞான சந்நியாசிகளி லொருவனாகத் தோன்றுகிறதேயன்றி உனது முகத்தைப்பார்த்தால் கஷ்டமென்பதே யறியாத ராஜகுமாரன் போலத் தோன்றுகிறது. கைகளைப்பார்த்தாலோ யாதொரு சிரமமான வேலையும் செய்திராத பெண்ணுடைய கைபோலிருக்கிறது. ஸ்ரீ புத்த நாதா ஓம் மணி பத்மே ஹூம் ஓம் ... ...

(குரு தமது வாயால் பெண்ணென்று சொல்லிய பாவம் தீரும் பொருட்டு ஜபிக்கிறார்.)

"நீ என்னுடன் வருவதென்றால் உனக்கு வெகுசங்கடமாயிருக்கும். நானோ பிரயோஜனமற்ற கிழவன்" என்று பலவாறு சொல்லினர்.

சந்திரன் ஒரே பிடிவாதமாகத் "தமது சீடனாகத்தானிருப்பே"னென்று சாதித்து விட்டான். அதுமுதல் நாள்தோறும் சந்திரனுக்கு லாமாவிடம் பற்று அதிகப்பட்டுவந்தது. லாமாஜி எப்போதும் சத்தியமே பேசுகிறவரென்பதையும் நல்ல ஹிருதயமும் ஜீவகாருணியமும் உடையவரென்பதையும் கண்டான்.

இந்த உலகத்தில் அவன் பிறந்ததுமுதல் பழகினவர்களெல்லாம் பொய் பேராசையிலும், சுயநயம் பாராட்டலிலும் நிறைந்தவர்களாயிருந்ததனால் இவ்வுலகமுழுதிலுமுள்ள மனிதர்களெல்லாரும் தமக்கொன்று பிறர்க்கொன்று கருதிப்பொய்யே பேசித்திரியும் பேய்களென்று நிச்சயித்துக்கொண்டிருந்தான். இப்போது லாமாவின் இயற்கையைக் கண்டவுடன் அவரிடம் அவனுக்கு மட்டில்லாத அன்பு விளைந்து விட்டது. அந்தகாலந்தொட்டு இவ்விம்யமலைச் சாரல் புயலில் இருவரும் தனிக்கும்வரை அவன் லாமாவுக்காக எத்தனையோ பாடுபட்டிருக்கிறான்.

அனேக இடங்களிற்சொற்ப உணவே அகப்பட்டபோது அதை அவருக்குக் கொடுத்துவிட்டுத் தான்பசியுட னிருந்துவிடுவான். சிலசமயங்களில் அவரை 1 மைல் 2 மைல் முதுகின்மீது சுமந்துகொண்டு செல்வான். புராதனகதையில் நாளாயினி தனதுகணவனை ஆதரித்து வந்ததுபோலச் சந்திரன் லாமாவை ஆதரித்துவந்தான்.

தற்காலம் அவரை விட்டுப்பிரிந்து ஷாமலே கிராமத்துக்கு வழிபார்த்துவரச் செல்லும்போது தன்மனதிற்குள்ளே பின் வருமாறு சிந்தித்துச் சென்றான். "லாமாஜி, நான்கணம் விலகினும் பொறுக்கமாட்டாதராவயிருக்கின்றார். வாயால்மட்டும் நீ போய்விடு என்று சொல்கிறார். ஓர் உயிரையும் பகையாதே என்று போதனை புரிந்த புத்தர் ஓர் உயிரையும் நேசியாதே என்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதுதான்லாமாவைச் சங்கடப்படுத்துகின்றது. லாமாவோ யாதொரு உயிருக்கும் தீங்கு நினை

க்கிறதில்லை. ஆனால் அவருக்குப் பிறரிடம் அன்புமட்டும் இருக்கின்றது. அதைமாற்ற முடியாமல் வருந்துகிறார். ஐயோ! பாவம், மனமிருக்கும் வரையில் ஓர்பொருளின்மீது அன்புபாராட்டாம லிருக்கமுடியாதென்று அவருக்குத் தெரியவில்லை. அன்பை மறக்கவேண்டுமென்று முயற்சிசெய்கிறார். இது சாத்தியமான காரியமா? நாம் காத்தளித்தபொருளை எப்படிமறப்பது? நம்மால் காதலிக்கப்படும் வஸ்துநமது மனத்தோடொன்றாய் விடுகிறது. இரண்டா யிருப்பினன்றோ பிரிக்கலாம்?."

என இவ்வாறு மனத்தை ஓடவிட்டுக்கொண்டு போனவன் திடீரென்று அவ்வோட்டத்தைத் தடுத்துவிட்டான்.

"சீ! துஷ்டமனமே, என்னையெங்கேகொண்டுபோகிறாய்? பழமையெல்லாம் நினைக்கப்போகிறாய்? மற, மற," என்று தன்னைத்தானே கடிந்துகொண்டான்.

அன்பைப்பற்றி யோசித்துக் கொண்டுவரும்போது இந்தபாலசன்யாசிக்குத்தான் பூர்வத்தில் அன்புவைத்தருந்த பதார்த்தங்களெல்லாம் நினைவிற்கு வந்துவிட்டன. ஆனால், வயது குறைவாக இருப்பினும் உலகப்பழக்கமும், கல்வியறிவும், மனத்திடனும் மிகவும் உடையோனாதலால் அந்த எண்ணத்தைத் திடீரென அமுக்கிக் கொண்டான். ஆனால் அந்தப்பொருள்களையோ அல்லதுவேறுபொருளையோ மனதினின்றும் வெளியேற்ற ஒருக்காலும் முடியாதென்பதை அவன் தீர்மானமாயறிவான்.

அந்தோ, இவ்வுலகத்தில் சந்திரனைப்போல எத்தனை ஜனங்களிருக்கவில்லை! தன்னைக்காதலிப்பவர்க ளொருவரும் கிடையாதென்பதை நன்றாக உணர்ந்தும் தன்மனதிலே ஊன்றிக்கிடக்கும் ஓர் உருவத்தை மறக்கமாட்டாமல், ஊரூராய்த் தனியே திரிந்து தவிக்கும் பாவிகளெத்தனைபேரில்லை? இதுநிற்க.

சந்திரன் கொஞ்சதூரம் போய்ப்பார்த்து வழியை ஒருவாறு உறுதிசெய்துகொண்டு திரும்பினான். குகைக்குள்வரும்போதே "லாமாஜி! நன்றாய் வெயிலடிக்கிறது. வழிபார்த்துவந்துவிட்டேன். புறப்படுங்க" ளென்று சொல்லிக்கொண்டேவந்தான்.

லமோவோ—இறந்து கிடக்கிறார்.

சந்திரன் பார்த்தவுடன் அவன்மனதிலே இடிவிழுந்தாற்போன்றது.

"லாமாஜி! லாமாஜீ!" என்றுகூவினான்.

லாமா, எங்கேமறுமொழி சொல்லப்போகிறார்! சந்திரன் "ஐயோ! ஐயோ!" என்று அலறினான்.

லாமாவுக்கருகில் இவனது புத்தகங்களிலொன்று விரிந்துகிடந்தது. அதில் பென்ஸிலால் சைனுபாஷை யெழுத்தில் "சந்திரா-பாம்பு-காசி—திர்த்தங்கரா" என்று எழுதப் பட்டிருந்தது.

சந்திரன் "லாமாஜி! நீரோ, பாம்புகடித்து இறந்துபோய்விட்டீர்? எத்தனையோ மருந்துகளெல்லாம் எல்லாருக்கும் கொடுத்துக் காப்பாற்றுகின்ற வராயிற்றே? உமக்கா மருந்தில்லாமற் போய்விட்டது? ஆ" என்று துடித்தான்.

அவர் இறந்துபோனபிறகே அவரிடம் தான்வைத்திருந்த அன்பின்முழு அன்பையும் அறிந்தான். அவர்யானைமுதற் புழுவரை எல்லாவுயிர்களையும் சகோதரனென்று நினைத்துக் கருணைபாராட்டி வந்ததும் சாதாரண ஜனங்கள் எத்தனை கஷ்டமின்றிப் பொய்பேசுகிறார்களோ அத்தனை சுலபமாய் அவர்சத்தியமே கூறிவந்ததும், தன்னிடம் அவர் நேசம் பாராட்டிவந்ததும், எல்லாம் அவன் மனத்திற்கு ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்துதாயிழந்தகன்றுபோற் தவித்தான்.

"ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ?"

* * *
* * *

சிறிதுபொழுது சென்றபின், சந்திரன், சமீபத்திலிருந்த ஓர் குழியில் அவரை, ஜபமாலை, அவரது புத்தவிக்கிரகம் முதலிய எல்லாவற்றுடனும் அடக்கஞ்செய்துவிட்டு "ஷாம்பே" கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான். இரவு உறக்கமில்லாமையாலும், பசியாலும், நடைதள்ளாடி "லாமாஜி, லாமாஜி" என்று புலம்பிக்கொண்டே ஷாம்பே கிராமம் போய்ச்சேர்ந்தான்.

---

## LADIES' PAGRS.

## மாதர்க்கிதமான பக்கங்கள்.

---

### இராதா இலட்சுமி வாழ்க்கை.

ஓர் வீட்டின் பின்பக்கத்தில் இரண்டுபெண்கள் உட்கார்ந்துபேசிக் கொண்டிருந்தார்கள். அதில் மூத்தவள் பெயர் ராதை. இவளுடைய தங்கையாகிய இளையவளின் பெயர் இலக்ஷுமி. இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கையில் சாதாரணமாக எத்தகைய புருஷனை மணம்புரிதல் நலமென்னுந் தர்க்கம் உண்டாயிற்று. இளையவள் 'தனத்தில் பெருத்தவரை மணம்புரியின்

நகைகள் துணிகள் முதலியன அதிகமாக அணிவதற்கு இடமுண்டு; ஆதலால் பணமுள்ளவரை மணம்புரிதலே நல' மென்றுள். மூத்தவளாகிய ராதை அதிற் பிரயோஜனமில்லையென்றும் ஏழையாயினும் கல்வியிற் சிறந்தவனே மணம்புரியத் தக்கவனென்றும் புகன்றனள். 'படிப்பினுற் பிரயோஜனம் யாது?' என வினவ, ராதை 'பொருளினுலென்ன பிரயோஜனம்? பொருள் நாசமாயின்பின் என்செய்கிறது?' என்றனள்.

சிலகாலம் சென்றபின்பு ஒருபணக்காரச்சிறுவர் மணம்புரிவதற்கிசையவே அப்பெண்களின் தாய் தந்தையர் அவர்களின் கருத்தை யறிந்தவர்களாய் அவருக்கு இளையபெண்ணைக் கொடுப்பதற்குச் சம்மதித்தனர். ராதைக்குக் கலியாணம் ஆகுமுந்தி இலக்ஷ்மிக்குக் கலியாணம் செய்யக் கூடாதாகையால் ராதைக்கும் புருஷனைத் தேடிக்கொண் டிருந்தார்கள்.

கொஞ்ச தூரத்திற் கப்பாலுள்ள ஒருஊரில் இலக்ஷ்மணராவ் என்னும் ஒருவர் பி. எ. பரிக்ஷையிற்றேறி பி. எல்லுக்குப் படித்துக்கொண்டிருந்தார். அவர் தற்கால ஆசார சீர்திருத்த விஷயங்களை மனதிற்கொண்டவர். தன் எண்ணத்திற்கேற்ற ஸ்திரீயையடைய விரும்பினவர். இவ்விராதை தன்னைப் பணக்காரரென்றறியின் கட்டாயம் வாழ்க்கைப்படச் சம்மதிப்பாளாகையால் ஏழையென்றே தெரிவித்து பி. எ. மட்டும் பாஸ்செய்திருப்பதாய்ச் சொல்ல அவள்பணத்தை மதியாமல் அவரை மணம்புரியச் சம்மதித்தனள்.

இரண்டுவருஷம் ஆயிற்று. இலக்ஷிமியானவள் தன்மனதிற் கிசைந்தபடி பணத்தைச் செலவிட்டுக் சந்தோஷமாய் வாழ்ந்தனள். ராதையோ பணத்தை இலக்ஷியம் செய்யாது புருஷனையே பெரிதெனநினைத்து அமரிக்கையாய் வாழ்ந்துவந்தனள். இலக்ஷிமியோ புருஷனுேடு சண்டை யிட்டுக்கொண்டு கண்டபடி திரவியங்களை வாரிவிட்டுக் கொண்டிருந்தனள். ராதை இவர்கள் செய்கிறதைப் பார்த்துச் சீக்கிரம் இவர்கள் தரித்திரர்களாய் விடுவார்களேயென்று மனவருத்தத்துட னிருப்பதைப்புருஷன் பார்த்துக் காரணத்தை நன்ருயறியாதவனுய்த் தான் பணக்காரனுயில்லையென்று ராதைவருத்தமடைகிறதாக நினைத்து அவனைச் சற்று அபிமானக்குறைவாய் நடத்த ஆரம்பித்தனன். அவள் அதனை தன் நுட்ப புத்தியால் உடனே யறிந்து மனஞ்சகியாதவளாகித் தன் புருஷனிடம் விடைபெற்றுக்கொண்டு பிறந்தகம்சென்றிருந்தனள்.

இவ்விதமாக 2, 3, மாதங்களாயின. ராதையினுடைய புருஷன் ராதையைப்பற்றிக் கவனிக்கவில்லை. இப்படியிருக்கும்பொழுது ராதையின் புருஷனுடைய கோபம் கொஞ்சங்கொஞ்சமாய்த் தணியஆரம்பித்தது. ராதை வீட்டிவில்லாததைச் சற்று உணர ஆரம்பித்தார். இருந்தாலும் அவளைப் போ

ய்ப்பார்ப்பது சற்று கவுரவக்குறைவென நினைத்தார். எக்காரணத்தைக் கொண்டாவது அவளைப்பார்க்க வேண்டுமென்னும் எண்ணம் அவருக்குண்டாய்விட்டது. கடைசியாக அவர் புறப்பட்டார். போகும் வழியில் லெக்ஷ்மியினுடையவீடு இருந்தது. உள்ளே போய் அவர்களைப் பார்க்கலாமென்று நுழைந்தார். முன்கட்டில் ஒருவருமில்லை. பின்கட்டில் சப்தம் கேட்டது.

"நான் உன்னைக் கலியாணமே பண்ணி யிருக்கக்கூடாது, நீ உன் காரியத்தை மாத்திரம் பார்த்துக்கொள்கிறாய். பணம் இருக்கிறவரையில் சந்தோஷமாயிருந்தாய். இப்போ—" என்னும் புருஷர்குரல் கேட்டது.

"ஆரம்ப முதற்கொண்டு என்னைப்பற்றி நீ கவனிக்கிறதேயில்லை. ராதையையும் அவள் புருஷனையும்பார்" எனப் பதிற்சொன்னாள்.

"ஆம், ராதையைப்பார். புருஷனுக்கு வேண்டியவைகளை எவ்வளவு க்வனமாய்ச் செய்கிறாள். நீயோ—" எனக் கேட்டார்.

இதைக்கேட்டவுடன் இலக்ஷ்மணராவுக்கு வெட்கமும் துக்கமும்வந்துவிட்டன. இப்பொழுது தான் வாஸ்தவ சங்கதியின்னதெனப் புலப்பட்டது. தன் துணையாளியிருக்கு மில்லத்திற் கேகினர். அவர்கள் இவருடைய வரவை ஆச்சிரியத்துடன் நோக்கினார்கள். ராதையை யங்கு காணவில்லை. முதலில் அவளிருக்குமிடத்தைக்கேட்கச் சற்றுயோசித்தார். பின்னர் எங்கேயென்று வினவக் கோவிலுக்குப்போயிருப்பதாய்த் தெரிந்துகொண்டார்.

அருகே ஒரு சிறிய கோவிலிருந்தது. அதலிருக்கும் அம்மன் பெயர் பார்வதி. ஆனலிக்கோவிலுக்கு ஒருவரும் போகிற வழக்கமில்லை. ஓர் சிறுயறையின் மூலையில் அம்மன் விக்கரகமொன் றிருந்தது. அதற்கு முந்தி ஒருசிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவ்விளக்கருகில் சில புஷ்பங்கள் கிடந்தன. அதற்கு முன்பாக ஒரு உருவத்தினிடமிருந்து, "பார்வதியம்மனே! என்புருஷனை என்னிடம் கொண்டுவா. நான் வருமையைப் பற்றி கவனிக்கவில்லையென அவருக்குத் தெரிவி. இல்லையாயின் என்னை நீயே யெடுத்துக்கொள்" என்னும் சப்தமுண்டாயிற்று.

உடனே, "ராதையே இங்கேவா. உன்னுடைய வேண்டுகோள் கேழ்க்கப்பட்டது. நீசந்தோஷமாயிருப்பாய்" என்று மற்றொரு சப்தமுண்டாயிற்று.

உடனே அப்பெண் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள். தன் புருஷனுடையகையில் தானிருக்கக் கண்டாள்.

ச. ஐ. மீ.

## PERIODICAL LITERATURE.

## பலபத்திரிகா வித்தார மஞ்சரி.

---

தமிழகத்தார்க்குப் பெரிதும் பயன்படு மெண்ணத்தோடு தஞ்சையினின்றும் வெளிப்பட்டிருக்கும் தமிழகத்தின் முதற் சஞ்சிகையை வரப்பெற்ரேம். இது தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தாரது மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதிலே சங்கீத முறை, சரீர தத்துவ விளக்கம், வீரசோழியக்காலவரையறை யாதிய முக்கியவிசேடங்கள் அடங்கியுள்ளன. மேன்மேலும் நன்குநடத்தப்பெறு மென்றெண்ண வேண்டியவாறு இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டிருத்தல் எமக்குச் சந்தோஷ மூட்டுகின்றது. தமிழ்ப்பாஷாபிமானிகள் அதனைக் கையேற்றுச் செய்யக் கடமைப்பட்டுள்ளதைச் செய்யப் பின்வாங்கமாட்டார்கள் என்றே நம்புகின்ரேம். விவசாய தீபிகையின் டிசம்பர் மீ த்திய சஞ்சிகைக்குத் திவான் பஹதூர் ர. ரகுநாதராயர் உருளைக்கிழங்கு மாகுலைப் பற்றி எழுதுகிருர். இது சிறந்த வியாசம். ஜனவரி மாதர் மனோரஞ்சனியிலே மாதர்க்குரித்தான விஷயங்கள் நிரம்பவும் காணலாம்.

மார்கழி மாதத்திய சேந்தமிழ்ப் பத்திரிகையிலே செந்தமிழில் எழுதப்பெற்ற வியாசங்களும், திருச்செந்திற் கலம்பகத்தின் பிற்பகுதியும், நச்சினர்க்கினியமும், பிறவும் அடங்கியுள்ளன. ஆசிரியர் ம-௱-௱-ஸ்ரீ, இராகவையங்காரவர்களுடைய கம்பர் சரித்திரவாராய்ச்சி இதிலும் முடியவில்லை. ஸ்ரீமத் அருணசலக்கவிராயர் கையினின்றும் பிறந்த 'செந்தமிழ்க்குத் தொண்டு செய்தோரை'ப் படித்துக் களிக்காத தமிழரிராரென்றே நம்புகின்றனம். விவேக பாநுவின் ஜனவரி மாதத்திய பகுதியிலே சைவசித்தாந்த மகிமைகள் பல மூன்று வியாஸங்களில் தெளிவுபெற எழுதப்பெற்றுள்ளன. இவற்ரேடு பிரம ஞான சபை (Theosophical socety) யார் கைம்முறைத் தமிழ் மொழிபெயர்ப்பும், ஹெலெ நாம்பாள சரித்திரமும் பிறவு முள. சிறந்த விஷயங்கள் இவையன்ரே!

மூற்கூறிய பத்திரிகைகளோடு ஆங்கிலேயப்பத்திரிகைகள் சிலவும் வழக்கம்போலக் கிடைக்கப் பெற்ரேம். அவையிற்றை அனுப்பித் தந்தவர்களுக்கெமது மனதார்ந்த வந்தனம்.

சுதேசமித்திரன் பத்திராதிபரை எவ்வாறு வந்திப்பேம்! மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் (பி. ஏ.) அவர்களாலன்ரே நமது தமிழர்கள் இராஜதந்திர முறையை அடைவுடனறிந்து வருகிருர்கள். " சர்வ ஜன மித்திரன் " பெயர்க்கிலக்காகவே வெளிப்போந் துலவுகின்றது.

## சடையப்ப முதலியார் புகழ்ச்சி.

(செந்தமிழ்)

கம்பர் தாம் பாடியருளிய இராமாவதாரத்துள் சடைய வள்ளலது பெருநன்றி பாராட்டி அவ்வள்ளலை ஆங்காங்கு ஒருபது கவிகளாற் புகழ்ந்துள்ளன ரென்பது,

எண்ணத் தரும்பா ருள்ளளவு மிரவி மதிய மெழுமளவுங்
கண்ணற் கினிய சயராம கதையி லொருபான் கவிமுழுதும்
வெண்ணைச் சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்கவைத்த
வண்ணத் துரைவே ளாண்பெருமான் வளஞ்சேர் சோழ மண்டலமே.

(சோழமண்டல சதகம்.)

என்னுஞ் செய்யுளாற் றெரிகின்றது. அப்பத்தும்பாடல்களாவன;—

நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநி கழ்ந்த விராமவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே. (பாயிரம்.)

விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையினாலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெ
யண்ணறன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே.

(பாலகாண்டம், வேள்விப்படலம்.)

அரம டந்தையர் கற்பக நவநிதி யமிழ்தஞ்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
றொருபெ ரும்பொரு ளின்றியே யுவரிபுக் கொளிப்ப
வெருவி யோடின வெண்ணைவாழ் கண்ணன் மேவாரின்.

(ஷை அகலிகைப்படலம்-கஅ)

வண்ண மாலைக் கைபரப்பி யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துளதால்.

(ஷை மிதிலைகாண்படலம். எச.)

மஞ்செனத் திகழ்தரு மலையை மாருதி
யெஞ்சலிற் கடிதெடுத் தெறிய வேநளன்
விஞ்சையிற் றாங்கினன் சடையன் வெண்ணையிற்
றஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மைபோல்

(யுத்தகாண்டம், சேதுபந்தனப்படலம்.)

வாசங் கலந்த மரைநாள நூலின் வகையென்ப தென்னை மழையென்
றூசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல் சரராமன் வெண்ணை யணுகுந்
தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொ லறிவாள ரென்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோ லகன்ற பதகன் றுரந்த வுரகம்.

(ஷை நாகபாசப்படலம். உகரு)

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் சேர்ந்த கண்ணனு மாளுங் காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்போனான்.

(ஷை மருத்துமலைப்படலம். ௫அ)

* அந்தணர் வணிகர் வேளாண் மரபின ராவி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளற் சடையனே யனைய சான்றோ
ருய்ந்தன மடிய மென்னு மூவகைய ருவரி நாண
வந்தன ரிராமன் கோயின் மங்கலத் துரிமை மாக்கள்.

'சங்கரனனைய சான்றோர்' எனவும் பிரதி பேதமுண்டு

(ஷை திருவபிடேகப்படலம். ௩௩)

அரியணை யநுமன் றாங்க வங்கத னுடைவாள் வாங்கப்
பரதன்வெண் கவிகை யேந்த விருவருங் கவரி பற்ற
விரைசெறி குழலி யோங்க வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

(ஷை. ஷை. ௩அ.)

'விரதமா தவர்களேத்த வெண்ணையூர்ச் சடையன் முந்தை' எனவும், 'விரிகடலுலங்காக்கும் வெண்ணைமன் சடையன் வண்மை' எனவும், 'உரிமையின யோத்தியுள்ளா ருரைசெய்வெண் காடன் வந்த மரபினோர்' எனவும் பிரதிபேதங்களுள்ளன.

*மறையவர் வாழி வேந்த மனுநெறி வாழி நன்னூன்
முறைசெயு மரசர் திங்கண் மும்மழை வாழி மெம்மை
யிறையவ னிராமன் வாழி யிக்கதை கேட்போர் வாழி
யணுபுகழ்ச் சடையன் வாழி யரும்புக ழனுமன் வாழி.

(ஷை விடைகொடுத்தபடலம் வாழ்த்து.)

---

## DEPARTMENTAL NOTES.
## பலதுறைக் கலாவிசேடக் குறிப்புக்கள்.

---

Musical—சங்கீதம் :

### திரிகால கோவிந்தன்.

கோவிந்தனென்ற ஒருவர் இன்றைக்குச் சுமார் நூறுவருடங்களுக்கு முன்னர் திருவாங்கூரில் வசித்து வந்தனர். இவர் இன்ன வருணத்தின ரென்பது இவரது சரித்திரம் அக்காலத்து எழுதப்படாமையினால் விளங்க வில்லை. இவர் சங்கீதத்தில் மகா நிபுணர். திரிகாலங்களிலும் சுரஞானம்,

* இச்செய்யுள் ஏட்டுப் பிரதியிலுள்ளது.

லயஞானத்துடன் மிகவும் இனிமையாய் எக்காலத்திலும், எப்படிப் பாட வேண்டுமானாலும் அப்படிப் பாடக்கூடிய மகாசக்தி கொண்டிருந்தார். இவர்கியாதி அக்காலத்தில் எங்கும் பரவியிருந்தது. இவ்வளவு மேன்மை பெற்ற இவருக்குக் குஷ்டநோய் பிடித்தது. கையில் பெருவியாதி யென்னும் மகா கருமவியாதியுடனிருந்தும், கூழிற்கைவைத்துக் கைவழுக்காமல், தம்பூர்த்தந்தியை மீட்டிச் சாமர்த்தியமாய்க் கேழ்ப்போர் மனமுருகும்படி உருக்கமாகவோ இனிமையாகவோ சமயோசிதமாகப் பாடுவார். தாம் மகா வியாதியால் கஷ்டப்படுவது ஜன்மாந்தர வினையின் பயனென மனநொந்தவராயும் தம்மிடம் கடவுள் கிருபைசெய்து அருளிய வித்தையை நினைந்து சந்துஷ்டியடைந்தவராயும், மனதினில் ஏதோ ஆலோசித்துத் தக்க ஜோஸிய ரொருவரிடம் தம் அந்தியகாலத்தைப் குறிப்பாய்க்கேட்டுத் தெரிந்துகொண்டார். இதன்பின்தேசசஞ்சாரஞ்செய்ய மனத் திடங்கொண்டு புறப்பட்டார். முதவில் எட்டையாபுரம்சென்று அவ்விடத்திய மஹாராஜா அவர்களிடம் தம்வித்தையின் சாமர்த்தியத்தைக்காட்டித் தக்க சன்மானம் பெற்றார். இங்கிருந்து சிவகங்கை சமஸ்தானமடைந்து, சின்னவைத்தி, பெரியவைத்தி இவர்களுக்கு இளமையிலே சிக்ஷை சொல்லிவைக்கும் பொறுப்பைச் சிவகங்கை ஜமீன்தாரவர்களின் வேண்டுகோளின்மேல் வகித்தனர். அவர்களுக்கு சங்கீதக்கடலைக் குடிக்கக் கொடுத்தவுடன், ஜமீன்தாரவர்களால் நிவேதனமாகக் கொடுக்கப் பெற்ற இரண்டுலக்ஷம் ரூபாயும், பரிசுகளும்பெற்று, அங்கிருந்து புறப்பட்டு திருவாரூருக்குச் சென்று, தியாகேசராலயத்துக்குச் சுவாமி சேர்வைக்குப் போனார். அங்கோர் மண்டபத்தில் அநேக பிராமணர்கள் கூடி ஈசுவரபஜனை சங்கீத சாஹித்யத்துடன் செய்துகொண்டிருந்தார்கள்.

கோவிந்தன் அப்பஜனையை ஓர் மூலையிலிருந்து கேட்டுக்கொண்டேயிருந்தவர் அவர்கள்பஜனை ஓய்ந்ததும் தமக்குப் அனுமதிதர வேண்டினர். அதற்கு அவர்கள், "சூத்திரனாகிய நீயா பாடப்போகிறாய்! பாடு" என்று ஏளனமாய்ச்சொல்லிப் பின்பு பாடும்படி உத்தரவு கொடுத்தார்கள். இவர்பாட ஆரம்பித்தபின் அங்கிருந்தவர்கள் தம்மைத்தாமே மறந்து சந்தியாவந்தனகாலம் தவறிப்போனதையும் உணராதவர்களாய் மெய்ம்மறந்து ஆனந்தபரவசமாய் சிரவணானந்தத்துடன் இவர் கானரஸத்தைப் பானம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இவரைத் திரிகாலகோவிந்த னென்றார்கள்போலும்! அதன்பின்பு அப்பிராமணோத்தமர்களுடைய பூரண ஆசிர்வாதம் பெற்றுத் தியாகேசனருளுடன் பாண்டரங்க திவ்ய க்ஷேத்திரத்துக் கேகினர். அங்கே, பாண்டரங்கநாதன் திருச்சன்னிதிக்கு அளவற்ற திரவியம் காணிக்கைசேர்த்து, அச்சந்நதியில் அநேகபிராமணர்களுக்கு அமுதுபடை செய்வித்து, பிராமணபோஜனம் நடந்தேறுஞ் சமயத்தில் சிஷியர்களை உத்தேசித்துக்கொண்டு சாப்பிடுகிறவர்களுக்குத் திருப்திவரும்படி பாடிக்கொண்டிருந்தார். போஜனம்முடியும் சமயத்தில் உயிரும் துறந்தார்.

T. C. ஸ்ரீநிவாஸ ராகவாசாரி.

[இது அதிக சுருக்கமான சரித்திரம். இவரைக் குறித்து விஸ்தரித்து எழுதுவோர் எழுதினால் பிரசுரிக்கச் சித்தமாயிருக்கிறோம். மற்றைய சங்கீத வித்துவான்களின் சரித்திரங்களையும் எழுதி யுபகரிப்போருக்கு அதிக வந்தனம் செலுத்தப்படும். அவையும் ஞானபோதினியில் இடங்காணும்: ப-ர்.]

# Works by T. Ramakrishna.

**'Padmini.'**—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, D.C.L., M.P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

**'Tales of Ind'** and other Poems—Rs. 2-8.

Copies can be had from the Secretary—*'Madras Literary Bureau.'*

---

## "THE TAMILS 1800 YEARS AGO."

**Rs. Five (5) only, Postage Extra.**

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief and vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter on Tamil poets and their poem displays the eruditon of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* (leader of the 13th May 1904.)

2. "For a book of the kind the materials must be collected from various sources, when they are collected they have to be so arranged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in his publication relates to as far back a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanakasabhai observes that the Sanskrit Literature is strongly poor, while a considerable portion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age: * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' Broadway, Black Town. Madras.

---

# TAMIL BOOKS.

1. 'தென்னாட்டுச் சிரேட்டர்கள்' (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப் பட்டுள்ளன. விலை அணா 12.

2. 'பன்னிரு பெண்மணிகள்':—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோரவர் இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெணபாலார்க்கு மேனாட்டுமாதர் சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொரு மாதும் கையில் ஏற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இதுதான். விலை அணா 6.

3. 'விக்டோரியா மெய்க்கீர்த்தி':—விக்டோரியா மகாராணியார் மீது பாடப் பட்ட புகழ்மாலை இது, இதிலே அரியபெரிய செய்திகவ் பல அடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால் அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்லவசனத்தில் எழுதப்பட்டுள்ளன, இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. யம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

4. இரசாயன சாத்திரம். விலை அணா 6.

5. சத்தியவிஜயம் விலை அணா 4.

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடாரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

## QUITE A FRESH PUBLICATION.

# A PRIMER OF TAMIL LITERATURE.

BY M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Price One Rupee, Postage Extra.**

## OPINIONS.

1. *The Christian Patriot.*—"As the first attempt of its kind the author of this highly interesting volume must have taken great pains in its production. Tamil literature is one of the most ancient of Indian literatures, and the number of works extant is sufficient of itself to indicate its vastness. According to Nakkirar, the revered President of the third *Sangam* the three *Sangams* seem to have existed for about ten thousand years, presided over by one hundred and ninety-seven kings who sat in judgment on the literary production of nearly eight thousand and seven hundred poets. With traditions and legends such as these, full of improbabilities and contradictions, the author must have spent years of hard study and labour to bring the primer to its present acceptable form. . .

Tamil literature is divided into the following six ages or periods in the book :—

I. The Age of the Sangams—up to A.D. 100.
II. The Age of the Buddists and Jains—A.D. 100 to 600.
III. The Age of Religious Revival—A.D. 600 to 1100.
IV. The Age of Literary Revival—A.D. 1100 to 1400.
V. The Age of the Mutts—A.D. 1400 to 1700.
VI. The Age of European Culture—A.D. 1700 to 1900.

The author has carefully and with great discrimination chronicled the various poets and works belonging to these periods. The history of each poet with the most interesting anecdote connected with him as well as the contents of the works of each is given in clear and concise language. A study of the Primer will not, we are sure, fail to create an admiration and love for the study of Tamil literature. The interesting feature of the book is its being up to date and the appendix of select works and the list of a hundred choice works in Tamil literature are very useful. * * * It has "infinite riches in a small room."

2. *The Madras Mail*—"The publication, which is in English, is the first attempt of its kind and will be of great help to Students in the High School and College Classes whose Vernacular is Tamil, and also to foreigners like European Missionaries, Civilians, &c., who will have a general idea of the vast literature extant in Tamil * * * The Primer supplies a real want."

3. *The Hindu.*—"Such a systematic treatise has been a long felt want. The book gives a clear idea of the wide range of Tamil literature."

4. *The Madras Times.*—"The author has done a service to his community and the public at large by compressing a great deal of *useful* and *up to date* information in the small compass of 218 pages."

5. *Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E.*—"I have no hesitation in saying it is *a most useful contribution* on a subject which cannot but interest residents of this part of India."

For copies apply to

The Secretary—"Madras Literary Bureau," 10, Broadway, Madras.